மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 7 • இதழ் 12 • ஜூன் 2023 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# தந்தையர் தின சிறப்பிதழ்





கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்

www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

தந்தையின் நேசம் உணர்ந்து மரியாதை செய்து
அவரிடமிருந்து வாழ்க்கை அனுபவங்களைக் கற்று
சிறந்த தந்தையாக உருவெடுக்க வழிகள் சொல்லும்

# தந்தையர் தின

## சிறப்பிதழ்



என்ற இந்த இனிய நூலை
வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

நெசவாளர்கள் அதிகம் வாழும் சேலத்தில் சில வருடங்களுக்கு முன்பு 'நெசவுக் கொண்டாட்டம்' என்கிற திருவிழாவை நடத்தியது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். அந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக, நெசவாளர் வாழ்வைப் போற்றும் விதமாக ஐந்து தனிப் பாடல்களைக் கொண்ட ஆல்பம் வெளியிட்டோம். பாடல்கள் என்றாலே அவை திரையிசைப் பாடல்களாக இருப்பதை மாற்றி, நெசவு வாழ்வைக் கொண்டாடும் விதமாகப் பிரபலமான பாடகர், பாடலாசிரியர்களை ஒப்பந்தம் செய்து தனி ஆல்பம் வெளியிட வேண்டும் என்பதே நோக்கம். ராம்ராஜ் காட்டன் தரமான உடை தயாரிப்பில் மட்டுமின்றி இசை வடிவத்திலும் நெசவின் சிறப்பை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என எடுத்த சிறப்பு முயற்சி இது.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்று, விஜய் தொலைக்காட்சியின் வழியாக நெசவாளர் பெருமையை உலகறியச் செய்த செந்தில் கணேஷ்–ராஜலட்சுமி தம்பதியர் எல்லாப் பாடல்களையும் இணைந்து பாடினர். அது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இப்போதும் 'சரிகம' யூடியூப் தளத்தில் 'நெசவுக்கொண்டாட்டம்' பாடல்களைப் பல லட்சம் பேர் ரசித்துக் கேட்கின்றனர்.

நெசவு செய்யும் தந்தையின் சிறப்பு பற்றி அதில் ஒரு பாடலைக் கவிஞர் சினேகன் எழுத, ராஜலட்சுமி மனமுருகிப் பாடி இருப்பார். தினமும் மற்றவர்களுக்குப் புதுவேட்டி நெய்து கொடுத்துவிட்டு, தான் அழுக்கு வேட்டியை மட்டுமே உடுத்தும் நிலையில் இருந்தாலும், மகளுக்கு எப்படி சிறந்த தந்தையாக அவர் வாழ்கிறார் என்பதைத் தன் வார்த்தைகளில் படம்பிடித்துக் காட்டியிருப்பார் கவிஞர் சினேகன்.

'எங்க அப்பா எனக்கு சாமி தான்...
என்னைச் சுமந்து நடந்த பூமி தான்...
அப்பா என்னும் வார்த்தை சிறுசு தான்...
அதற்குள் அடங்கும் அர்த்தம் பெருசுதான்...
எல்லா உறவும் அடங்கும் அதுக்குள்ள...
அவரு அன்ப அளக்க கணக்கு இல்ல...
அப்பா கூட இருந்தா பயமில்ல...
அவருக்கு இங்க யாரும் நிகரில்ல'

என்று தொடரும் பாடலில், 'ஐந்து வயது வரை அப்பாவின் மடியும் ஒரு கருவறைதான்' என்கிற ஒரு வரி இடம்பெறும். குழந்தைகள் வளர வளர இடைவெளியும் சேர்ந்தே வளர்கிறது என்பதை உணர்த்தும் வரி அது. குழந்தையாக இருக்கும்போது பிள்ளைகளுக்குத் தந்தையிடம் இருக்கும் நெருக்கம், நினைவு தெரியும் நாட்களில் குறையத் தொடங்கும். தாய் அன்பில் பேசி வெளிப்படுத்தும் முறை அதிகமாக இருப்பதும், தந்தையிடம் பேசாத, வெளிப்படுத்தாத அன்பே அதிகமாக இருப்பதும் கிராமப்புறக் குடும்பங்களில் இன்றும் நடைமுறை. தந்தைக்கும் 'என் மகளை, என் மகனை நான் இவ்வளவு உயிராக நேசிக்கிறேன்' என்று சொல்லும் வாய்ப்பு பெரும்பாலும் அமைவதில்லை. தந்தைக்கு ஒரு நெருக்கடி வரும்போது இயல்பாகவே பிள்ளைகளுக்கும் தந்தைக்கும் இடையில் உள்ள நெருக்கம் வெளிப்படும்.

எவ்விதமான நெருக்கடியும் இல்லாத ஒரு நாளில், 'எங்களுக்கு இந்த உலகை அறிமுகம் செய்தும், எங்களையே உலகமாகக் கருதியும் வாழ்கிற தந்தையே... உங்களின் பிள்ளையாகப் பிறந்தது எங்கள் பாக்கியம்' என்று



அன்பை வெளிப்படுத்தும் தினமாக உலகம் முழுவதும் ஜூன் மாதம் தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. கருவில் சுமந்து உயிர் கொடுத்தவர் அன்னை என்றால், உலகை அறிமுகம் செய்து தோளில் சுமப்பவர் தந்தை. மேற்கத்திய வழக்கமாக இருந்தாலும், நல்ல பண்புகள் எங்கிருந்தாலும் எடுத்துக்கொள்வது சிறப்பு. பொதுவாக ஆண்களின் உலகம் தியாகமும் உழைப்பும் நிரம்பியது. நாட்டுக்கு ராணுவ வீர் பாதுகாப்பாக இருப்பதைப் போல, வீட்டின் பாதுகாப்பிற்குத் தன்னை அர்ப்பணித்தவர், ஒரு பொறுப்பான தந்தை.

ஒரு அமெரிக்க ராணுவ வீரரின் மகளே, தந்தையர் தினம் உருவாகக் காரணமாக இருந்தார். சொனாரா என்ற அமெரிக்க சிறுமி 16 வயதில் தன் தாயை இழந்தபோது, அவரின் தந்தை வில்லியம் ஜாக்சன் குடும்பப் பொறுப்பு முழுமையையும் ஏற்றார். தன் மகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டார். தாயுமானவராக மாறிய தந்தையின் அன்பில் நெகிழ்ந்த சொனாரா, அன்னையர் தினம் போல, தந்தையர் தினமும் கொண்டாட வேண்டும் என்று வாஷிங்டன் மாகாணத் தலைவருக்கு வேண்டுகோள் வைத்தார்.

அமெரிக்காவில் சொனாரா வழிபடும் சர்ச், சிறுமியின் வேண்டுகோளை ஏற்று வில்லியம் ஜாக்சனை கௌரவப்படுத்தியதாகவும், பிறகு வாஷிங்டன் மாகாணம் தந்தையர் தினத்திற்கு ஏற்பு வழங்கியதாகவும், அதன்பிறகு அமெரிக்கா முழுவதும் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப்போது உலகம் முழுவதும் தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது.

மகனுக்கோ, மகளுக்கோ முதல் ஹீரோவாக இருப்பவர் தந்தை. முடிவெடுக்கும் திறன், பிரச்னைகளை எதிர்கொள்ளும் மன உறுதி, குடும்பத்தைத் தாங்கி நிற்கும் நற்பண்புகள் என அனைத்தும் குழந்தைகளுக்குத் தந்தையிடமிருந்து போகிறது. அதேபோலத் தீயபழக்கங்கள் தந்தைக்கு இருந்தால் அதையும் பிள்ளைகள் கற்றுக்கொள்வதைப் பார்க்கலாம். தீய சொற்களைப் பேசும் குழந்தைகள், அந்த வார்த்தைகளைப் பெரும்பாலும் தந்தையிடமிருந்து கற்றுக்கொள்வதாக ஓர் ஆய்வறிக்கை சொல்கிறது. 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற பழமொழி தந்தையின் சொல் எத்தகைய வலிமையானது என்பதை உணர்த்தும்.

தந்தையின் சொல்லே பிள்ளைகள் வாழ்வில் எதிரொலிக்கும் எனில், செயல்களைப் பற்றித் தனியாகக் குறிப்பிட வேண்டியதில்லை. ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்குச் சேர்த்து வைக்கும் அழியாச் சொத்து, நற்பண்புகள் நிரம்பிய வாழ்வுதான். அதை வார்த்தைகளில் சொல்வதைவிட, வாழ்ந்து காட்டும்போது அவர்கள் அதை அப்படியே பின்பற்றும் திறனுடையவர்களாக மாறுகிறார்கள்.



குழந்தைகள் அன்பும் மகிழ்வும் நிறைந்த வாழ்வைப் பெற, தந்தையின் பங்களிப்பு முக்கியமாகிறது. வீட்டுக்கும், நாட்டுக்கும், சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமையைத் தந்தையின் வழிநின்று குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். ஒரு சிறப்பு தினம் அன்பைப் பகிர்ந்து கொள்வதாக மட்டுமின்றி, பொறுப்பை உணர்வதாகவும் இருப்பது அவசியம்.

அன்னையர்களைக் கௌரவிப்பதற்காக அன்னையர் தினம் கொண்டாடப்படுகிற வழக்கம் முதலில் தொடங்கினாலும், தந்தையர் தினமும் கொண்டாடப்படுகிறபோதே 'பெற்றோர்' என்கிற இருவரின் இல்லற வாழ்வு முழுமை அடைகிறது. சமீபத்தில் எனது தந்தையாரை இழந்தேன். தொழிலை நேர்மையாகச் செய்யவும், குடும்பத்தை உண்மையாக நேசிக்கவும், சமூகத்தின் வளர்ச்சிக்கு முடிந்த பங்களிப்பைச் செய்யவும் தந்தையிடம் இருந்து கற்றேன். இந்தப் பொறுப்புணர்வே அவர் எனக்களித்த மிகப்பெரிய சொத்து. அதே பொறுப்புணர்வோடு என் மகள்களுக்குச் சிறந்த தந்தையாக வாழ வேண்டும் என்பதை உணர்ந்தே இருக்கிறேன்.

அன்பை வெளிப்படுத்தி பொறுப்பை உணர்கிற தினமாக உலக தந்தையர் தினம் அமையட்டும். குடும்ப நலனுக்கு உழைக்கிற அத்தனை தந்தையர்களுக்கும் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வாழ்த்துகள்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**



# சிறந்த தந்தையாக இருங்கள்!



மகன் தனது வேலை தேடும் முயற்சியில் ஒன்பதாவது இன்டர்வியூவுக்குப் போய்விட்டுச் சோர்வுடன் திரும்பி வீட்டுக்கு வந்தான். இம்முறையும் அவனை நிராகரித்து விட்டார்கள். கல்லூரிப் படிப்பு முடித்தது முதலே பொருத்தமான வேலை கிடைக்காமல் தடுமாறிக்கொண்டிருக்கிறான். கிடைக்கும் தற்காலிக வேலைகளும் சில நாட்களுக்கு மட்டுமே நீடிக்கின்றன.

“அவன் சரியான உதவாக்கரை. அவனைப் படிக்க வைக்கச் செலவு பண்ணினது வேஸ்ட். அவனால் எந்த வேலைக்கும் போக முடியாது” என்று உறவினர்கள் கிண்டல் செய்தார்கள். வங்கியில் வாங்கிய கல்விக்கடன் தவணையைக் கட்ட ஆரம்பிக்குமாறு வங்கி அதிகாரிகள் நெருக்குகிறார்கள். வீட்டுக்குத் தெரியாமல் அவன் ரகசியமாகக் காதலிக்கும் பெண்ணோ, “எங்கள் வீட்டில் திருமணத்துக்கு அவசரப்படுத்துகிறார்கள். நீ வேலைக்குப் போகாமல் உன்னைப் பற்றி வீட்டில் சொல்ல முடியாது. வேறு வழியின்றி வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளைக்கு நான் கழுத்தை நீட்ட வேண்டியிருக்கும்” என்று பயமுறுத்துகிறாள்.

இந்தச் சூழலில்தான் மீண்டும் ஒரு நிராகரிப்பைச் சந்தித்துவிட்டு வீட்டுக்கு வந்தான். நேராகத் தந்தையிடம் போனவன், “என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா. நீங்கள் எதிர்பார்த்தபடி என்னால் வெற்றிகரமாக மாற முடியவில்லை. எனக்கு எப்போதுமே வேலை கிடைக்காது போலிருக்கிறது. நான் நிஜமாகவே உதவாக்கரைதான்” என்றான்.

அப்பா அவனை அருகில் அமரவைத்து தோளை ஆறுதலாக அரவணைத்தார். “வாழ்க்கையில் மகிழ்ச்சியும் வரும், கஷ்டமும் வரும். எதுவும் நிரந்தரம் இல்லை. உன்னை ஏன் நிராகரித்தார்கள் என்று காரணத்தைக் கண்டுபிடி. தவறுகளை நினைத்து அவமானம் அடையாதே. அவற்றிலிருந்து கற்றுக்கொள்! என் மகிழ்ச்சிக்கு எப்போதும் நீதான் காரணமாக இருக்கிறாய். எதிலும் உன் சிறப்பான முயற்சியைக் கொடு. இங்கு நிராகரித்தார்கள் என்றால், இதைவிடச் சிறப்பான வேலை கிடைக்கும் என்று நம்பு. கடின உழைப்பும் ஆர்வமும் உனக்குச் சிறந்த வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும். இந்த உலகத்துக்குப் பல கோடி பேரில் நீயும் ஒருவனாக இருக்கலாம். ஆனால், எனக்கு நீதான் உலகம். நான் எப்போதும் உன் பக்கம் இருப்பேன்” என்று சொன்னார்.

அடுத்த இன்டர்வியூவில் அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது. அவன் தன் அப்பாவுக்கு மானசீகமாக நன்றி சொன்னான்.

இவர்போலச் சிறந்த தந்தையாக இருப்பது சுலபம் இல்லை. தன் மகனுக்கோ, மகளுக்கோ என்ன வயது ஆனாலும் ஒரு தந்தையின் வழிகாட்டுதல் எப்போதும் முடிவடைந்து விடுவதில்லை. ஒரு சிறந்த ரோல் மாடலாக, குழந்தைகளின் தேவைகளை எப்போதும் உணர்ந்தவராக, தேர்ந்த வழிகாட்டியாக, எல்லாம் கலந்த முழுமையான தந்தையாக இருக்க சில வழிகள்:

● குழந்தைகளுடன் நேரம் செலவழியுங்கள். உங்களுக்கு ஆபீஸில் பெரிய புரொமோஷன் கிடைத்திருக்கிறது, நிறைய சம்பள உயர்வு வந்திருக்கிறது, விலையுயர்ந்த கார் வாங்கியிருக்கிறீர்கள், வசதியான வீடு கட்டியிருக்கிறீர்கள் என்ற எதுவுமே குழந்தைகளுக்கு முக்கியமில்லை. நீங்கள் அவர்களுடன் நேரம் செலவழிக்கிறீர்களா என்று மட்டுமே பார்ப்பார்கள். எவ்வளவு பிஸியாக இருந்தாலும், அவர்களுடன் நேரம் செலவிடுங்கள். இரவு உணவைக் குடும்பத்துடன் ஒன்றாகச் சாப்பிடுங்கள். விடுமுறை நாட்களில் அவர்களை விளையாட அழைத்துச் செல்லுங்கள். குடும்பத்துக்கான அந்த நேரத்தில் வேறு எந்த வேலைகளையும் வைத்துக்கொள்ளாதீர்கள்.

● இரண்டு குழந்தைகள் இருந்தால், இருவருக்குமே சமமான முன்னுரிமை கொடுத்து நேரம் ஒதுக்குங்கள். ஒவ்வொருவருடனும் உங்கள் உறவு தனித்துவமாக மலர வேண்டும். மகனோ, மகளோ, பாகுபாடு பார்ப்பதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. வேலை முடிந்து களைப்பாக வீடு திரும்பினாலும், கிடைக்கும் சில நிமிடங்களை இருவருக்கும் சரிசமமாகக் கொடுங்கள்.


● குழந்தைகளின் முக்கியமான பெருமைக்குரிய தருணங்களில் அவர்களுடன் இருங்கள். நீங்கள் அவர்களை வட இந்திய சுற்றுலா அழைத்துப் போவதை விட முக்கியமானது, அவர்கள் பள்ளி செல்லும் முதல் நாளில் அவர்களை அழைத்துச் சென்று பள்ளியில் விடுவது. விலையுயர்ந்த பரிசுப் பொருளை அவர்களுக்கு வாங்கித் தருவதைவிட அவசியமானது, பள்ளி விளையாட்டுப் போட்டிகளில், அவர்கள் பங்கேற்கும்போது பார்வையாளராகச் சென்று கைத்தட்டி உற்சாகப்படுத்துவது. சுற்றுலாவோ, பரிசுப் பொருளோ சில நாட்களில் மறந்துபோகலாம். ஆனால், ‘அப்பா அந்த நேரத்தில் என்னுடன் இருந்தார்’ என்பது வாழ்நாள் முழுக்க நினைவில் நிற்கும்.

● வாழ்க்கையின் அடிப்படைக் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். சிறு குழந்தையாக இருக்கும்போது பல் துலக்கக் கற்றுக்கொடுப்பது, கொஞ்சம் வளர்ந்ததும் சைக்கிள் ஓட்டுவதற்குப் பழக்குவது, டீன் ஏஜ் பருவத்தில் ஷேவ் செய்ய சொல்லித் தருவது என்று பல விஷயங்கள் தந்தையின் கடமைகள். எளிமையான பழக்கங்கள் முதல் பெரிய வாழ்க்கைப் பாடங்கள் வரை அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

● குழந்தைகள் தவறுகள் செய்தே எது சரி என்று கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தவறு செய்யும்போது, அதிலிருந்து கற்றுக்கொள்ள வழிகாட்டுங்கள். அவர்களின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் தவறு இருந்தால், அதை எப்படித் தவிர்க்கலாம் என்று அவர்களுடன் பேசுங்கள். அவர்களை தண்டிப்பது தீர்வு இல்லை. விமர்சனங்களை மென்மையாகச் செய்யுங்கள், சின்னச் சாதனைகளையும் மனம் திறந்து பாராட்டுங்கள். அப்போதுதான் அவர்களுக்குத் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

● குழந்தைகளுடனான உரையாடல் மிக முக்கியமானது. அவர்கள் தங்கள் குழப்பங்களைச் சரிசெய்துகொள்ளவும், சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும், தந்தையிடமே ஓடிவருவார்கள். அவர்களிடம் உரையாடி தெளிவுபடுத்துங்கள். சாதாரண நேரங்களில் அவர்கள் சும்மா பேசும்போதும், “என்ன இது வெட்டிப் பேச்சு” என்று எரிச்சல் அடையாதீர்கள். உங்களுக்கு முக்கியமே இல்லாத விஷயமாகத் தெரியும் ஒன்று, அவர்களுக்கு மிக முக்கியமாகத் தெரியலாம். அவர்களின் நிலையிலிருந்து எதையும் பாருங்கள்.

● குழந்தைகள் வளர்ந்தபிறகு அப்பாக்களின் உரையாடல் குறைந்துவிடுகிறது. சம்பிரதாயமான பேச்சுக்கள் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. அப்படி இருக்காதீர்கள். பிள்ளைகளுக்கு எதில் ஆர்வமோ, அதுபற்றி அவர்களுடன் இனிமையாகப் பேசுங்கள். கிரிக்கெட், இசை, கார் என்று எது பற்றியும் உரையாடல் இருக்கலாம். ‘அப்பா நம்முடன் நன்றாகப் பேசுகிறார்’ என்று அவர்கள் உணர வேண்டும். அது போதுமானது. ●



## தந்தையைப் புரிந்துகொள்ள...

ஒவ்வொருவருக்கும் வயது ஏற ஏற தன் அப்பாவைப் பற்றிய பிம்பம் மாறுகிறது. வாழ்க்கை ஒரு முழுச்சுற்று சுற்றிவந்து மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே நிற்பது போன்ற நினைவுகள் அவை!

**4 வயதில்:** அப்பாவை நேசிக்கிறேன். அவர்தான் எனக்கு ஹீரோ.

**7 வயதில்:** என் அப்பாவுக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை.

**10 வயதில்:** அப்பா நல்லவர்தான். ஆனால், அவருக்கு அடிக்கடி கோபம் வருகிறது.

**14 வயதில்:** நான் குழந்தையாக இருந்தபோது அப்பா என்னிடம் அன்பாக இருந்தார். இப்போது அப்படி இல்லை.

**17 வயதில்:** அப்பா, இந்தக் காலத்துக்கு ஏற்றமாதிரி இல்லை. கொஞ்சம் பழைய பஞ்சாங்கமாக நடந்துகொள்கிறார்.

**20 வயதில்:** இந்த மனுஷன் ஏன் இப்படி பொறுமை இல்லாமல் என்னிடம் எரிந்து விழுகிறார். இவரால், ஒவ்வொரு நாளும் நரகமாக நகர்கிறது.

**23 வயதில்:** அம்மா எப்படித்தான் இந்த மனுஷனைச் சகித்துக்கொள்கிறாரோ! இவரை எப்போதும் நான் மன்னிக்கவே மாட்டேன்.

**26 வயதில்:** நான் எது செய்தாலும் அது சரியில்லை என்கிறார். ஏன்தான் இப்படி இருக்கிறாரோ!

**30 வயதில்:** எந்த விஷயத்திலும் என்னால் அப்பாவுடன் ஒத்துப்போக முடியவில்லை. அவர் செய்யும் எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை. அவரைப் பார்த்தாலே எரிச்சலாக இருக்கிறது.

**35 வயதில்:** என் குழந்தைகளை என்னால் சமாளிக்க முடியவில்லை. குழந்தையாக இருக்கும்போது நானும் இப்படித்தான் அடம் பிடித்தேனோ?!

**40 வயதில்:** அப்பா என் தவறுகளை எல்லாம் சரிசெய்து என்னை ஒழுக்கமாக வளர்த்தார். நான்தான் அவரை டார்ச்சர் செய்திருக்கிறேன்.

**45 வயதில்:** என் குழந்தைகளைப் பார்க்கும்போது எனக்குப் பயமாக இருக்கிறது. அப்பா எப்படித்தான் எங்களைச் சமாளித்தாரோ!

**50 வயதில்:** அப்பா எங்களுக்காக எவ்வளவோ திட்டமிட்டு எல்லாவற்றையும் செய்தார். கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு எங்களுக்குக் கேட்டதையெல்லாம் கொடுத்தார். அவர் எவ்வளவு கனிவாக நடந்துகொண்டாரோ, அதுபோலப் பிள்ளைகளிடம் என்னால் இருக்க முடியவில்லை.

**60 வயதில் மீண்டும்:** அப்பாவை நேசிக்கிறேன். அவர்தான் எனக்கு ஹீரோ.



## மாறாத காட்சி!

**ஐந்து வயதில் இருந்தபோது**

**மகன்:** அப்பா, எப்போ வருவீங்க?

**அப்பா:** சாயந்திரம் 6 மணிக்கு வந்துடுவேன், வெளியில் போகலாம்.

**மகன்:** இப்படித்தான் எப்பவும் சொல்றீங்க, ஆனா சீக்கிரம் வரவே மாட்டீங்க!

**அதே மகனுக்கு 30 வயது ஆனபோது அப்பா:** எனக்கு வீட்டில் போர் அடிக்குதுடா!

**மகன்:** சாயந்திரம் சீக்கிரம் வந்து வெளியில் கூட்டிப் போறேன்.

**அப்பா:** இப்படித்தான் எப்பவும் சொல்றே, ஆனா வீட்டுக்குச் சீக்கிரம் வர்றதில்லை!





## எனக்குப் பிடிக்கும்!

ஒரு சிறுவன் வீட்டில் படித்துக் கொண்டிருக்கிறான். வேலைக்குச் சென்றிருந்த பெற்றோர்கள் இரவில் வீடு திரும்பினர். அம்மா அவசரமாகச் சமைத்தார். அனைவரும் சாப்பிட அமர்ந்தார்கள். தந்தைக்குக் கருகிய ரொட்டியைப் பரிமாறினார் அவன் தாய். அப்பா எதுவும் சொல்லாமல் சாப்பிட்டார். ரொட்டி கருகிவிட்டதைச் சொல்லி வருத்தப்பட்டார் அம்மா. அதற்கு அப்பா, “எனக்கு கருகிய ரொட்டிதான் ரொம்பப் பிடிக்கும்'' என்று சொன்னபடி சாப்பிட்டு முடித்தார்.

இரவு தூங்கும் முன்பு தந்தையிடம் தயக்கத்துடன், “அப்பா, உங்களுக்கு உண்மையில் கருகிய ரொட்டிதான் பிடிக்குமா?” என்று அச்சிறுவன் கேட்டான். சற்று நேரம் மௌனமாக இருந்த தந்தை, ‘‘மகனே! உன் அம்மா தினமும் வேலைக்கும் சென்று கொண்டு, வீட்டிலும் நமக்காகக் கஷ்டப்படுகிறார். பாவம், இன்று களைத்துப் போய் கவனக்குறைவாக இருந்திருப்பார். அதனால் ரொட்டி கருகிவிட்டது. ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தப் போவதில்லை. ஆனால் கடும் வார்த்தைகள் காயப்படுத்தும். அந்த மனக்காயத்தைத் தவிர்ப்பது குடும்பத்துக்கு நல்லது” என்றார். இந்த வரிகள் சிறுவனின் மனதில் ஆழப் பதிந்தன. அதை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தான்.



## பேச்சு தரும் சுவை!



ஹாலில் உட்கார்ந்தபடி அப்பா புத்தகம் படித்துக்கொண்டிருக்க, மகன் எதிரே இன்னொரு சோபாவில் அமர்ந்து போனில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டு மணி நேரம் போனது. இருவரும் அருகருகே இருந்தும் எதையும் பேசிக்கொள்ளவில்லை என்பது மகனுக்குப் புரிந்தது. உடனே அப்பாவிடம் ‘சாரி’ சொன்னான். அப்பா சிரித்தபடி, ‘‘மசால் தோசை சுவையாக இருந்தால், அதற்குத் தொட்டுக்கொள்ள சட்னி தேவையில்லை. அருகருகே இருப்பது இனிமை தருகிறது என்றால், பேச்சே தேவையில்லை'' என்றார்.

## அப்பாவும் பிள்ளைகளும்!

➲ சில பிள்ளைகளுக்கு 25 ஆண்டுகள் அப்பாவின் வருமானத்தில் தான் வாழ்ந்தோம் என்பது மறந்து போகிறது. ஆனால், 15 ஆண்டுகள் நம் வருமானத்தில் அவர் வாழ்கிறார் என்பது மட்டும் நன்றாக நினைவிலிருக்கிறது.

➲ ஒரு தகப்பனார் பத்துக் குழந்தைகளைக் காப்பாற்றலாம். ஆனால் பத்துக் குழந்தைகள் ஒரு தகப்பனாரைக் காப்பாற்றும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.



## இதுவரை தராதது!

ஒரு மகன் வளர்ந்து வேலைக்குப் போனதும் தன் தந்தையிடம், “அப்பா, எனக்குக் கிடைக்கத் தகுதியான ஒரு விஷயம், நீங்கள் இதுவரை எனக்குத் தராமல் இருந்தது, அப்படி ஏதாவது இருக்கிறதா?” என்று கேட்டான். அப்பா மெல்லிய புன்சிரிப்புடன், ‘‘அதை இப்போது உனக்கு நான் தருகிறேன்'' என்று மென்மையாகக் கன்னத்தில் அடித்தார். தன் தவறுகளைத் தண்டிக்காமல் அப்பா சகித்துக்கொண்டதை மகன் புரிந்துகொண்டான்.





# செல்ல அப்பா... கண்டிப்பு அப்பா..!

பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு நடைபெற்றது. அரையாண்டுத் தேர்வு முடிந்திருக்க, அதற்கான ரேங்க் கார்டைப் பெற்றோரிடம் கொடுத்து, பிள்ளைகளின் கல்விநிலையை ஆசிரியர்கள் விவரிக்கும் சந்திப்பு. அப்பாவுடன் சென்றிருந்த அருண் பதற்றமாக இருந்தான். வழக்கமாக இதுபோன்ற சந்திப்புக்கு அவன் சந்தோஷமாக வருவான். வகுப்பில் எப்போதும் முதல் ரேங்க் எடுக்கும் அவனை ஆசிரியர்கள் புகழ்வார்கள். அப்பா அதைக் கேட்டு பூரிப்பதைப் பார்த்து அவனுக்குப் பெருமையாக இருக்கும். பள்ளியிலிருந்து நேராக ஐஸ்க்ரீம் கடைக்கு அழைத்துச் சென்று பட்டர்ஸ்காட்ச் ஐஸ்க்ரீம் வாங்கித் தருவார் அப்பா.

ஆனால், இப்போது நிலைமை வேறு. 12–ம் வகுப்பு படிக்கும் அவன் ஒரே நேரத்தில் தன் வகுப்புத் தேர்வுகளுக்கும் படித்தான், ஐ.ஐ.டி நுழைவுத் தேர்வுக்கும் படித்தான். ஐ.ஐ.டி வாய்ப்புக்காகத் தினம் தினம் பல மணி நேரம் படிப்பு, மாதிரித் தேர்வுகள் எழுதுவது என்று இருந்ததால், வகுப்புத் தேர்வுகளில் அவனால் கவனம் செலுத்த முடியவில்லை. வழக்கமாக முதல் ரேங்க் எடுக்கும் அவன், இம்முறை 20–வது ரேங்க் வாங்கியிருந்தான்.

அவன் சந்திக்கும் நெருக்கடிகளையும், அவனது பிரச்னைகளையும் அப்பா அறிந்திருக்க வாய்ப்பில்லை. விற்பனை சார்ந்த ஒரு வேலையில் இருக்கும் அப்பா, வாரம் முழுக்க எங்கெங்கோ பயணம் செய்வார். இரவில் வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வருவார், காலையில் தாமதமாகவே விழிப்பார். அவர் வருவதற்குள் அருண் தூங்கிவிடுவான். அவன் இரவில் ஒன்பது மணிக்கே தூங்கிவிட்டு, அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து படிக்கும் வழக்கம் வைத்திருந்தான். அப்படி படிப்பதே அவனுக்கு வசதியாக இருந்தது. அவன் இப்படிப் படிப்பதுகூட அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ரேங்க் கார்டை வாங்கியதும் அப்பா என்ன சொல்வாரோ என்று அருண் பயந்தான்.

அருணையும், அவன் அப்பாவையும் பார்த்ததும் வகுப்பு ஆசிரியைத் தன் நாற்காலியிருந்து எழுந்துவிட்டார். ‘‘அருண் முன்னாடி மாதிரி இல்ல, அவனுக்குப் படிப்புல ஆர்வம் குறைஞ்சிடுச்சு. எப்பவும் முதல் ரேங்க் வாங்கற பையன், இப்ப 20–வது ரேங்க். கணக்குல நிறைய பேர் சென்டம் வாங்கியிருக்காங்க. இவன் 60 மார்க் எடுத்திருக்கான். கவலையா இருக்கு. இவன் இப்படி மாறுவான்னு ஸ்கூல்ல யாரும் எதிர்பார்க்கல. இன்னும் மூணு மாசத்துல பப்ளிக் எக்ஸாம் இருக்கு. அதுல ஃபெயிலாகி ஸ்கூலுக்குக் கெட்ட பேர் வாங்கித் தந்துடுவானோன்னு பயமா இருக்கு. அவனை ஒழுங்கா படிக்கச் சொல்லுங்க” என்றார் ஆசிரியை.

அங்கு வந்திருந்த பல பிள்ளைகளின் பெற்றோர்கள் கவலையுடன் அருணைப் பார்த்தனர். அப்பா திரும்பி அருண் முகத்தைப் பார்த்தார். அவன் தலையைக்

குனிந்துகொண்டான். ஆசிரியர்கள், சக மாணவர்களின் பெற்றோர்கள்முன்னிலையில்அப்பாதன்னைத்திட்டுவாரோ என்று பயந்தான். ஆனால், அப்பா அவனை ஆதரவாக அரவணைத்துக் கொண்டார். "கவலைப்படாதீங்க டீச்சர், அவன் கஷ்டப்பட்டு படிக்கிறான், எனக்கு அது தெரியும். நிச்சயமா அவன் இந்த ஸ்கூலுக்குப் பெருமை தேடித் தருவான்" என்றார்.

இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத ஆசிரியை ஏமாற்றம் அடைந்தார். அமைதியாக அருணின் ரேங்க் கார்டைக் கொடுத்தார். அப்பா அருணின் தோளில் கைபோட்டு வெளியே கூட்டிவந்து, "பட்டர்ஸ்காட்ச் ஐஸ்க்ரீம் சாப்பிடலாம், வா" என்று கடைக்கு அழைத்துப் போனார். படிப்பு பற்றி எதுவுமே கேட்கவில்லை. ஐஸ்க்ரீம் சாப்பிட்டபோது அருணின் கண்களில் ஒரு துளி கண்ணீர் எட்டிப் பார்த்தது.

அவன் முன்பைவிட வெறியோடு படித்தான். அடுத்த சில மாதங்களில் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் பாஸ் செய்தான். அதைவிட முக்கியமாக, ஐ.ஐ.டி நுழைவுத் தேர்வில் நல்ல ரேங்க் வாங்கினான். இந்தியாவின் பெருமைக்குரிய ஐ.ஐ.டி ஒன்றில் படிக்க அவனுக்கு இடம் கிடைத்தது. "பட்டர்ஸ்காட்ச் ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுங்கப்பா" என்று அப்பாவைக் கூப்பிட்டான். இம்முறை ஐஸ்க்ரீம் சாப்பிடும்போது அப்பாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஒரு துளி பொங்கியது.

கண்டிப்பு காட்டி வளர்த்தால்தான் பிள்ளைகள் ஒழுங்காக இருப்பார்கள் என்ற நினைப்பு பல அப்பாக்களுக்கு இருக்கிறது. 'அடியாத மாடு படியாது' என்று பழமொழி சொல்லி, இப்படி தண்டிப்பதை நியாயப்படுத்துவார்கள். 'செல்லம் கொடுத்துக் கெடுத்துவிடாதீர்கள்' என்று பலரும் அறிவுரை வேறு கொடுப்பார்கள். செல்லமும் கண்டிப்பும் எப்படி கொடுக்கப்பட வேண்டும்?



- ஒழுக்கத்துடன் கண்டிப்பாக வளர்ப்பது என்பது வெறுமனே தண்டிப்பது மட்டுமில்லை. குழந்தைகள் தவறு செய்யும்போது தண்டிப்பது போலவே, அவர்கள் நல்லது செய்யும்போது பரிசுகள் கொடுத்துப் பாராட்ட வேண்டும். ஒருமுறை தண்டித்தால், மூன்று நல்ல விஷயங்களையாவது தேடிக் கண்டுபிடித்துப் பாராட்ட வேண்டும். அடிக்கடி பாராட்டும்போது அவர்கள் நிறைய நல்ல விஷயங்களையும், குறைவான தவறுகளையும் செய்வார்கள்.

- நல்லது செய்தால் பரிசுகள் வாங்கித் தருவது சரிதான். ஆனால், குழந்தைகள் விரும்பும் பொம்மைகள், சாக்லேட், டிரஸ் என்று எல்லாமே ஏதோ ஒரு நற்செயல் செய்தால்தான் கிடைக்கும் என்பது போன்ற சூழலை ஏற்படுத்தாதீர்கள். இயல்பாக அவர்கள் விரும்பும் எதையும் வாங்கிக் கொடுங்கள். நல்லது செய்யும்போது கூடுதலாக ஒன்றை வாங்கிக் கொடுங்கள். ஆனால், வீட்டு வேலைகள் செய்வது, அவர்களின் பொம்மைகளை விளையாடி முடித்ததும் அடுக்கி வைப்பது போன்ற இயல்பான செயல்களுக்கெல்லாம் பரிசுகள் தராதீர்கள். இந்த வேலைகளைச் செய்வது உங்களுக்கு அவர்கள் செய்யும் உதவி என்பது போன்ற நினைப்பு எழுந்துவிடும்.

- தவறுகள் செய்யும்போது தண்டியுங்கள். ஆனால், அது அடி, உதை என்று வன்முறைப் பாடமாக இருக்கக்கூடாது. அது உடலிலும் உணர்வுரீதியாகவும் காயம் ஏற்படுத்திவிடும். பிறகு குழந்தைகள் உங்களிடமிருந்து விலகிவிடுவார்கள். உங்கள் மீது அவர்களுக்கு இருக்கும் மரியாதையும் போய்விடும்.

- குழந்தைகளின் செயல் கோபத்தை ஏற்படுத்தினாலும், அவர்களைக் கடுமையான வார்த்தைகளால் திட்டாதீர்கள். நிதானம் இழந்து குரலை உயர்த்தினாலே அவர்கள் பயந்துவிடுவார்கள். 'நீ தப்பு செய்ததால் உன்னிடம் இன்று முழுக்கப் பேச மாட்டேன்', 'இன்று வெளியில் போய் விளையாட உனக்கு அனுமதி கிடையாது' என்பது போல மென்மையான தண்டனைகள் மூலம் அவர்களுக்குத் தவறுகளைப் புரிய வையுங்கள்.

- தண்டனை தருவதோ, பரிசுகள் கொடுப்பதோ, எதையுமே தொடர்ச்சியாகச் செய்யுங்கள். சில சமயங்களில் கண்டுகொள்ளாமல் விடுவது, பிஸியாக இருப்பதால் அதைக் கவனிக்க மறுப்பது என்று செய்யாதீர்கள். 'நல்லது செய்தால் அப்பா பாராட்டுவார், தப்பு செய்தால் கண்டிப்பார்' என்ற உணர்வு எப்போதும் அவர்கள் மனத்தில் இருக்க வேண்டும். அதுதான் அவர்களை நல்லது செய்யவும், தவறுகளைத் தவிர்க்கவும் தூண்டும். ●

# அவரே முதல் ஹீரோ!

ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் ஹீரோ, தன் தந்தையாகத்தான் இருக்க முடியும். பல தந்தைகள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருக்கிறார்கள், சில தந்தைகள் எப்படி வாழக்கூடாது என்பதற்கு உதாரணமாக இருக்கிறார்கள். தந்தைகள் எப்படி முன்னுதாரணமாக மாறுகிறார்கள் என்பதை விவரிக்கிறது, 'என்னைப் பின்தொடரும் அந்தச் சிறுவன்' என்னும் ஒரு கவிதை.

'நான் கவனத்துடன் இருக்க விரும்புகிறேன். ஒரு சிறுவன் என்னைப் பின்தொடர்கிறான். நெறி தவறிப் போகும் துணிச்சல் எனக்கு இல்லை. அவனும் அதே வழியைப் பின்தொடர்வான் என்ற பயம்தான் காரணம். அவன் பார்வையிலிருந்து நான் ஒருபோதும் தப்ப முடியாது. நான் செய்யும் எதைப் பார்த்தாலும் அவனும் அதையே முயற்சி செய்கிறான். என்னைப் போல் ஆகப்போவதாகக் கூறுகிறான் அந்தச் சிறுவன். அவன் வருங்காலத்திற்காக நான் இப்போது ஒரு பாதையைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறேன், என்னைப் பின்தொடரும் அந்தச் சிறுவனுக்காக!' என்பது அந்தக் கவிதையின் பொருள்.

தன் மகன் சாதனையாளராக வேண்டும் என்று அறிவுரைகளை அள்ளித்தரும் தந்தையை விட, வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு சோதனையையும் சாதனையாக மாற்றி வாழ்ந்திடும் தந்தை சிறந்த முன்மாதிரி ஆகிறார்.



# சின்னச் சின்ன தியாகங்கள்!

பெரிய விஷயங்களை விட்டுக் கொடுப்பதையே தியாகம் என்கிறோம். ஆனால், அப்பா செய்யும் நூற்றுக்கணக்கான சின்னச் சின்ன தியாகங்கள் எதுவும் மதிப்புக் குறைந்ததில்லை.

❖ வெளியிலிருந்து வீடு திரும்பியதுமே அப்பா கேட்கும் முதல் கேள்வி, "அவங்க சாப்பிட்டாங்களா?" என்று பிள்ளைகளைப் பற்றித்தான்! பிள்ளைகளுக்குப் பிடித்த உணவை அம்மா சமைக்கும்போது, அவர்கள் நிறைய சாப்பிடட்டும் என்று, தான் குறைவாக எடுத்துக்கொள்வார்.

❖ தனக்கு உடல்நலமில்லாத போதும் அலுவலகம் செல்வார். ஆனால், பிள்ளைகளுக்கு ஏதாவது என்றால் பதறிப் போய் லீவ் போட்டுவிட்டு மருத்துவமனைக்குக் கூட்டிக்கொண்டு ஓடுவார்.

❖ தன் உடைகள் சாயம் போய் வெளிறிஇருந்தாலும் கவலைப்பட மாட்டார். ஆனால், பிள்ளைகளுக்கு எப்போதும் புத்தாடைகள் வாங்கித்தர மறக்க மாட்டார்.

❖ தன்னிடம் பணமே இல்லாமல் போனாலும், பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கொடுத்துவிட நினைப்பார். அவர்களின் கல்வியே அவரின் முதன்மையான வாழ்க்கை லட்சியமாக இருக்கும்.



## கிடைக்காததைத் தந்தார்!

அவருக்கு ஆங்கிலம் படிக்கக்கூடத் தெரியாது. ஆனால், தன் மகன் உலக வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்பதற்காக இங்கிலீஷ் மீடியம் பள்ளியில் சேர்த்தார். தன் பிள்ளைகள் ஏ.சி அறையில் தூங்க வேண்டும் என்பதற்காக, நாள் முழுக்க வெயிலில் அலைந்து அவர் உழைப்பார். பட்டன்களில் எண்கள் அழிந்துவிட்ட சாதாரண செல்போன் வைத்திருக்கும் அவர், கல்லூரி நாட்களில் தன் மகனுக்கு முதன்முதலில் வாங்கிக் கொடுத்தது லேட்டஸ்ட் மாடல் ஸ்மார்ட் போன். சொந்த மாநிலத்தின் எல்லையைக்கூடத் தாண்டியிருக்காத அவர், தன் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி படிக்க வைத்தார். தனக்கு எதுவுமே கிடைக்கவில்லை என்றாலும், தன் பிள்ளைகளுக்கு எல்லாம் குறைவின்றிக் கிடைக்குமாறு பார்த்துக்கொண்டார். அப்பாக்கள் எப்போதுமே இப்படித்தான்!



## அப்பாவின் அறிவுரைகள்!

❖ ''அப்பா, இந்த வேலைக்கான தேர்வில் தோற்றுவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது. படிக்க கஷ்டமாக இருக்கிறது. நான் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன்" என்று சோகமாகச் சொன்னான் மகன். "அதாவது, நீ ஒரு காலிப் பாத்திரமாக இருக்கிறாயா?" என்றார் அப்பா. "அந்தப் பாத்திரம் வெறுமையாகவும் கருமையாகவும் இருக்கிறது" என்றான் மகன். "அதில் நீ நினைத்தால் எதை வேண்டுமானாலும் நிரப்ப முடியும். அதில் அறிவையும் ஒளியையும் நிரப்பு" என்றார் அப்பா. மகன் உற்சாகத்துடன் படித்து தேர்வில் வென்றான்.

❖ அடுத்த முறை இதேபோல இன்னொரு குழப்பத்துடன் வந்தான் மகன். "எனக்கு இரண்டு வேலைகள் கிடைத்துள்ளன. எதைத் தேர்வு செய்வது என்று குழப்பம்" என்றான். "இரண்டுக்கும் என்ன வித்தியாசம், சொல்" என்றார் அப்பா. "முதல் இடத்தில் நிறைய வேலை இருக்கும். அனுபவசாலிகள் நிறைய பேர் இருப்பார்கள். அதனால் பதவி உயர்வு கிடைக்கத் தாமதமாகும். இரண்டாவது இடத்தில் வேலை குறைவு, வேலை தெரிந்தவர்களும் குறைவு. சீக்கிரமே புரொமோஷன் கிடைக்கும்" என்றான் மகன். "வேலையில் கற்றுக்கொள்ள விரும்பு. வேலை தெரிந்தவர்கள் இல்லாத சூழல் உன்னைச் சோம்பேறி ஆக்கிவிடும். அனுபவசாலிகள் மத்தியில் இரு. கற்றுக்கொண்டு அந்தப் போட்டியை அனுபவி. அதுவே உன்னை வளர்க்கும்" என்றார் அப்பா.

## அப்பா சொன்ன பொய்கள்!

தன் அப்பா பற்றிய ஒரு மகனின் புகார். இது பெரும்பாலான அப்பாக்களுக்குப் பொருந்தக்கூடும்.

❖ என் குழந்தைப் பருவத்திலிருந்து பார்க்கிறேன். அப்பா நிறைய பொய் சொல்கிறார். கிட்டத்தட்ட எல்லா விஷயங்களைப் பற்றியுமே அவர் சொன்னவை பொய்கள்தான்.

❖ எங்களுக்குத் தேவையான எல்லாமே இருப்பதாகப் பொய் சொல்வார். எப்படியாவது வாங்கியும் கொடுத்துவிடுவார்.

❖ எங்கள் எல்லாச் செலவுகளுக்கும் பணம் இருப்பதாகப் பொய் சொல்வார். எப்படியாவது பணமும் ஏற்பாடு செய்துவிடுவார்.

❖ வெளியில் எங்களைச் சாப்பிடக் கூட்டிப் போனால், தனக்குப் பசிக்கவில்லை என்று பொய் சொல்லிச் சாப்பிடாமல் தவிர்ப்பார். எங்களுக்கு விரும்பியதை வாங்கித் தருவார்.

❖ தன் சக்திக்கு மீறி உழைத்து எங்களுக்காகச் சம்பாதித்தாலும், தனக்குக் களைப்பாகவே இல்லை என்று பொய் சொல்வார்.

❖ வெயிலில் அலைந்து வியர்வை சிந்தி உழைத்தாலும், வேலை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், 'நான் பார்க்கறது சூப்பர் வேலை' என்று பொய் சொல்வார்.

❖ எத்தனையோ பிரச்னைகளைச் சந்தித்து நொந்து போனாலும், முகத்தில் போலியாக ஒரு புன்னகையை ஒட்டிக்கொண்டு, தான் மகிழ்ச்சியாக இருப்பதாகச் சொல்வார். எங்கள் மகிழ்ச்சிக்காக தனது மகிழ்ச்சியைத் தொலைத்தவர் அப்பா.



# ரோல் மாடல் அப்பா!

➲ அதிகாலை நேரத்தில் ரயிலில் தன் மகனுடன் வந்திறங்கிய அப்பா, ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தார். பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல வெளியே காத்திருந்த ஆட்டோக்காரர்கள், வந்த பயணிகள் அனைவரையும் மொய்த்துக்கொண்டார்கள். அப்பா அமைதியாகத் தன்னை அழைத்த முதல் ஆட்டோக்காரர் பின்னால் போனார். பேரம் எதுவும் பேசவில்லை. அப்பா, மகன் இருவரின் கைகளிலிருந்த பெட்டிகளை டிரைவர் வாங்கி ஆட்டோவில் வைத்தார். எங்கே போக வேண்டும் என அப்பா சொல்ல, ஆட்டோ கிளம்பியது.

அதேஸ்டேஷனில்இன்னொருஅப்பாவும்தன்மகனோடு வந்தார். சூழ்ந்துகொண்ட ஆட்டோக்காரர்களைக் கடந்து அவர் வருகிறார். அங்கிருந்த ப்ரீ பெய்டு ஆட்டோ நிறுத்தத்திற்குச் செல்கிறார். முன்கூட்டியே பணத்தைச் செலுத்தி ப்ரீ பெய்டு ஆட்டோ சவாரியைப் பெறும் கவுன்ட்டருக்குள் நுழைந்து ஆட்டோவுக்குப் பணம் செலுத்துகிறார். அவருக்காக ஒதுக்கப்பட்ட ஆட்டோ வருகிறது. இவர்களை ஏற்றிக்கொண்டு கிளம்புகிறது. நியாயமான கட்டணத்தைச் செலுத்தி அவர் வீடு போய்ச் சேர்கிறார்.

இரண்டு அப்பாக்களும் தங்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கிறார்கள். பணத்தை அலட்சியமாகச் செலவு செய்ய, முதல் அப்பா கற்றுத் தருகிறார். எந்த இடத்தில் எப்படிச் செலவைக் குறைக்க முடியும் என்று இரண்டாவது அப்பா கற்றுத் தருகிறார். பணத்தை அலட்சியமாகச் செலவு செய்வதல்ல பணக்காரத்தனம். அதைப் பக்குவமாய்ச் செலவு செய்வதுதான் மிகச்சிறந்த பணக்காரத்தனம்.

➲ போக்குவரத்து நெரிசல் மிகுந்த காலை நேரத்தில் தன் பிள்ளைகளைப் பள்ளியில் விடுவதற்காக வாகனத்தில் செல்கிறார் அப்பா. வீட்டிலிருந்து கிளம்பவே தாமதமாகிவிட்டது. அதனால் தாறுமாறாக வாகனத்தை ஓட்டுகிறார். சிக்னலில் சிவப்பு விளக்கு எரிவதைக்கூடப் பொருட்படுத்தாமல் விதிகளை மீறி விரைகிறார். பிள்ளைகள் பயப்படுவதைக்கூட அவர் கவனிக்கவில்லை.

இரண்டாவது அப்பா மகனை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்று வீடு திரும்புகிறார். விடுமுறை நாளின் இரவு நேரம் என்பதால் சாலைகளில் கூட்டம் அதிகமில்லை. ஒரு சிக்னலில் சிவப்பு விளக்கு எரிகிறது. பச்சை விளக்கு எரியும் சாலையில் வாகனமே இல்லை. அங்கு போக்குவரத்துக் காவலர்களும் கண்காணிப்புக்கு இல்லை. ஆனாலும் அவர் காத்திருந்து, தனக்கான பச்சை விளக்கு எரிந்தபோதே வாகனத்தை எடுத்தார். முதல் அப்பா அலட்சியத்தையும் அவசரத்தையும் கற்றுக்கொடுக்கிறார். யாருமே கண்காணிக்காதபோதும் விதிகளை மதித்து நேர்மையாக இருக்க வேண்டும் என இரண்டாவது அப்பா கற்றுத் தருகிறார்.

பிள்ளைகளுக்கு அப்பாக்களே முதல் ரோல் மாடல். அவர்கள் எப்படி வளர வேண்டும் என நினைக்கிறார்களோ, அப்படி அப்பாக்கள் இருக்க வேண்டும். அதற்கு என்னவெல்லாம் செய்யலாம்?

➲ சொல்வது ஒன்று, செய்வது வேறொன்றாக இருக்கக்கூடாது. குழந்தைகளுக்கு எதையெல்லாம் அறிவுரைகளாகச் சொல்கிறீர்களோ, அதையெல்லாம் நீங்களும் பின்பற்றுங்கள். பிள்ளைகள் கெட்ட வார்த்தை பேசாமல், கோபத்தில் யாரையும் திட்டாமல், யாருடனும் சண்டை போடாமல் வளர வேண்டும் என்று ஆசைப்படும் அப்பா, அதேபோன்ற குணங்களுடன் இருக்க வேண்டும். அறிமுகம் இல்லாத எளிய மனிதர்களைக்கூட உங்கள் குழந்தை கருணையுடனும் மரியாதையாகவும் நடத்த வேண்டும் என நீங்கள் விரும்பினால், நீங்களும் அப்படி இருக்க வேண்டும். எந்தக் கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாகாத அப்பாவைப் பார்த்தே, பிள்ளைகளும் அப்படி வளர்கிறார்கள்.

➲ குடும்பத்தினரையும் உறவினர்களையும் அன்பாகவும் கண்ணியத்துடனும் அப்பா நடத்தினால், பிள்ளைகளும் அதேபோல வளர்வார்கள். பெற்றோருக்கு மரியாதை செய்வது, வாழ்க்கைத்துணையை அன்புடன் அரவணைத்து வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்வது, உறவினர்களைப் பற்றி முதுகுக்குப் பின்னால் தவறாகப் பேசாமல் இருப்பது, நண்பர்களின் நற்செயல்களைப்





பாராட்டுவது என்று இருக்கும் அப்பாவைப் பார்த்து வளரும் குழந்தைகள், அதேபோன்ற குணங்களுடன் இருப்பார்கள். எவ்வளவு எதிர்மறையான மனிதரிடமும் ஒரே ஒரு நல்ல குணத்தையாவது கண்டுபிடித்துப் போற்றும் அப்பா, தன் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த ரோல் மாடல் ஆகிறார். முகத்துக்கு நேரே ஒருவிதமாகவும், முதுகுக்குப் பின்னால் வேறுமாதிரியும் பேசும் அப்பாக்கள், தங்கள் குழந்தைகளைக் குழப்பத்திற்கும் மன உளைச்சலுக்கும் ஆளாக்குகிறார்கள்.

➲ நீங்கள் தவறு செய்தால், அதை ஒப்புக்கொண்டு தயக்கமின்றி மன்னிப்புக் கேளுங்கள். பிள்ளைகளை வெளியில் கூட்டிப் போகிறேன் என்று சொல்லிவிட்டுச் சரியான நேரத்துக்கு வராமல் போனாலோ, அவர்கள் கேட்ட எதையேனும் வாங்கிவர மறந்தாலோ, அவர்களிடம் வருத்தம் தெரிவித்து ‘சாரி’ சொல்லுங்கள். தவறு செய்தால் மன்னிப்பு கேட்கும் குணம் அவர்களுக்கு வரும். தவறுகளைச் சரிசெய்து கொள்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வார்கள். ஒவ்வொரு முறையும் சரியான செயல்களையே செய்வது பற்றி யோசிப்பார்கள்.

➲ நீங்கள் அலுவலகத்தில் சென்று கஷ்டப்பட்டு செய்யும் வேலைகள் பற்றிப் பிள்ளைகளுக்கு எதுவும் தெரிய வாய்ப்பில்லை. ஆனால், வீட்டில் என்ன செய்கிறீர்கள் என்பதை அவர்கள் பார்க்கிறார்கள். வீட்டு வேலைகளை மனைவியுடையது என்று நினைக்காமல், சுத்தம் செய்யும் வேலையைப் பணிப்பெண்ணின் கடமை என்று கருதாமல், அப்பாவும் அவற்றில் உதவிகள் செய்வதைப் பிள்ளைகள் பார்க்க வேண்டும். அம்மாவின் வேலைகளை அப்பாவும் பகிர்ந்துகொண்டு அவருக்கு மகிழ்ச்சி தருகிறார் என்பதைப் பார்த்துப் பிள்ளைகளும் வீட்டு வேலைகளைச் செய்யும் பொறுப்பானவர்களாக மாறுவார்கள்.

➲ எவரிடமும் நமக்கான மரியாதையைக் கேட்டுப் பெற முடியாது. நம் செயல்களைப் பார்த்து அவர்களாகவே கொடுப்பதுதான் மரியாதை. தந்தை என்பதற்காகவே பிள்ளைகள் ஒருவரை மதித்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. பிள்ளைகள் மதிப்புடன் பார்த்துப் போற்றும்விதமாக அப்பாவின் செயல்கள் நேர்மையாகவும் உண்மையாகவும் கச்சிதமாகவும் இருக்க வேண்டும்.

➲ கலங்கரை விளக்கம் என்பது தூரமாகக் கரையில் இருந்தபடி கப்பல்களுக்கு வழிகாட்டுகிறது. அப்படி அப்பாவும் குறிப்பிட்ட இடைவெளியில் இருந்துகொண்டு பிள்ளைகளுக்குவழிகாட்டவேண்டும்என்று அர்த்தமில்லை. அரவணைத்து அன்பைப் பொழியும்போதுதான் அவர்கள் நெருங்கி உங்களிடம் கற்றுக்கொள்கிறார்கள். அன்புக்காக ஏங்கும் பிள்ளைகளை ஆராதித்து, ‘என் உலகமே நீங்கள்தான்’ என்று உணர்த்தினால் அவர்கள் நெகிழ்ந்துவிடுவார்கள். அவர்களின் ஒவ்வொரு முயற்சியையும் பாராட்டி வழிகாட்டினால், அப்பாக்களைவிடச் சிறப்பானவர்களாக அவர்கள் மாறுவார்கள். ●

# உதறிய மகனும் உணர்ந்த மகனும்!



தன் சொந்த உழைப்பால் முன்னுக்கு வந்த நடுத்தரக் குடும்பத் தலைவர் அவர். தான் கனவு கண்டது போலச் சொந்த வீடு கட்டினார். தன் ஒரே மகனைப் படிக்கவைத்து, நல்ல வேலையில் சேர்த்து, திருமணமும் செய்தார். அடுத்தடுத்து இரண்டு பேரப்பிள்ளைகள் பிறந்தன. இனிமையான கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள்.

முதுமையில் தனிமை கொடியது. அது அவருக்கு விரைவிலேயே நேர்ந்தது. மனைவி உடல்நலமில்லாமல் போய் திடீரென இறந்துவிட்டார். அந்தத் துயரத்திலிருந்து அவரால் மீள முடியவில்லை.

மாமியார் இறந்ததும் மருமகள் தனது சுயரூபத்தைக் காட்டினாள். வீடு கட்டும்போதே அந்த முதியவர் தனக்கும் தன் மனைவிக்கும் ஒரு பெரிய படுக்கையறை, மகனுக்கும் மருமகளுக்கும் ஒரு படுக்கையறை, பேரக்குழந்தைகள் வளரும்போது அவர்களுக்காகத் தனித்தனி அறை என்று திட்டமிட்டுக் கட்டியிருந்தார். வெளியே கார் ஷெட்டை ஒட்டி, டிரைவரோ, திடீரென வரும் தூரத்து உறவினர்களோ தங்குவதற்காகச் சிறிய அறை ஒன்று இருந்தது. "அத்தைதான் இறந்துவிட்டார்களே… இன்னும் மாமாவுக்கு எதற்குப் பெரிய அறை? நம் குழந்தைகளுக்கு அது விளையாட்டு அறையாக இருக்கட்டுமே! அவரை அங்கிருந்து துரத்துங்கள்" என்று கணவனுக்குத் தூபம் போட்டாள்.

அவனும் மனைவி சொல்லை மறுக்காமல் அப்பாவிடம் போனான். "அப்பா, திடீரென அம்மா இறந்துவிட்டதால், வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் என் மனைவிதான் செய்ய வேண்டியிருக்கிறது. உங்கள் எதிரில் கேஷுவலாக நைட்டி அணிந்துகொண்டு வேலைகள் செய்ய அவள் சங்கடப்படுகிறாள்" என்றான். "என் மருமகள் தனக்கு வசதியான எந்த உடை அணிந்தாலும் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை" என்றார் முதியவர். ஆனாலும் மகன் விடவில்லை. ''அப்படி அவளால் ரிலாக்ஸாக உங்கள் எதிரில் நடமாட முடியாது அப்பா. ப்ளீஸ், புரிந்துகொள்ளுங்கள். கார் ஷெட் அருகில் இருக்கும் சின்ன அறைக்கு நீங்கள் போனால் பிரச்னைகள் தீர்ந்துவிடும்" என்றான்.

முதியவர் எதிர்த்துப் பேசாமல் அந்த அறைக்கு மாறிக்கொண்டார். அவருக்கான பராமரிப்பு, உணவு என்று எல்லாமே படிப்படியாகக் குறைவதை உணர்ந்தார். பேரக்குழந்தைகள்கூட அவரை ஆசையாக நெருங்கவிடாதபடி மருமகள் பார்த்துக்கொண்டாள். நிஜம் அவருக்குப் புரிந்தது.

இரண்டு மாதங்கள் கடந்தன. முதியவர் ஒருநாள் தன் மகனை அழைத்து விமான டிக்கெட்டுகளைக் கொடுத்தார். "வட இந்தியச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். குடும்பத்துடன் 10 நாட்கள் போய் வாருங்கள்'' என்றார். ''நீங்கள் எங்களோடு வரவில்லையா?" என்று சம்பிரதாயத்துக்குக்கூட மகனோ, மருமகளோ கேட்கவில்லை. மகிழ்ச்சியாக அவர்கள் கிளம்பிப் போனார்கள்.

முதியவர் ஏற்கனவே பேசி ஏற்பாடு செய்தபடி அந்த வீட்டை ஐந்து கோடி ரூபாய்க்கு விற்றார். தனக்கு உடனே சிறியதாக வீடு ஒன்றை விலைக்கு வாங்கி, தன் பொருட்களை அங்கு கொண்டுபோனார். மகனுக்கு வாடகைக்கு ஒரு வீடு பார்த்து, அவன் பொருட்களை அங்கு அனுப்பிவைத்தார்.

சுற்றுலா முடிந்து ஊர் திரும்பிய மகன், தங்கள் வீடு பூட்டியிருப்பதையும், வாசலில் யாரோ ஒரு வாட்ச்மேன் நிற்பதையும் பார்த்து அதிர்ச்சி அடைந்தான். அந்த வாட்ச்மேன் அவனை உள்ளே விட மறுத்ததும், கோபமாகத் தன் அப்பாவுக்கு போன் செய்து கத்தினான். "கார்லயே இருங்க, வர்றேன்" என்று சொன்ன முதியவர் அரை மணி நேரத்தில் வந்தார்.




வந்தவர் தன் மகனிடம் ஒரு சாவியைக் கொடுத்தார். நடந்ததை விவரித்தார். ''நான் சம்பாதித்துக் கட்டின வீடு, நானே அதுல அந்நியன் மாதிரி இருக்க முடியாது. அதனால்தான் வித்துட்டேன். நான் தனியா போறேன். உனக்கு வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்து, ஒரு வருஷத்துக்கான வாடகையும் கொடுத்துட்டேன். அதுக்குப் பிறகு அங்கேயே இருக்கறதும், வேற வீடு பார்க்கறதும் உங்க விருப்பம். அங்க உன் மனைவி தன் வசதிப்படி டிரஸ் பண்ணிக்கிட்டு இருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு முதியவர் கிளம்பினார்.

தந்தையை உதறித் தள்ள முயன்ற தனக்கு இந்தத் தண்டனை சரிதான் என்று உணர்ந்துகொண்டான் மகன். மருமகள் தலைகுனிந்தாள்.

**இ**து இன்னொரு மகனின் கதை. ராகவனின் மனைவி இறக்கும்போது அவருக்கு 45 வயது. உறவினர்கள், நண்பர்கள் பலரும் அவரை மறுமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியும், அவர் மறுத்துவிட்டார். ''என் மனைவி, அவள் நினைவாக எனக்கு ஒரு மகனை விட்டுச் சென்றிருக்கிறாள். அவனை வளர்த்து ஆளாக்குவது என் பொறுப்பு. அவனுக்கு அம்மாவாகவும் இருந்து அவனை வளர்க்கப் போகிறேன். மறுமணம் செய்தால் எனக்கு ஒருவேளை நல்ல மனைவி கிடைக்கலாம், ஆனால் அவனுக்கு நல்ல அம்மா கிடைப்பார்களா என்பது சந்தேகம். எனவே, அவனுக்காக இனி வாழப் போகிறேன். இன்னொரு துணை எனக்குத் தேவையில்லை'' என்று சொல்லிவிட்டார்.

வருடங்கள் நகர்ந்தன. மகன் படித்து, பட்டம் பெற்று, தந்தையின் தொழிலைக் கவனிக்கும் அளவுக்கு வளர்ந்தான். தன் வீட்டையும் தொழிலையும் மகன் பெயரில் எழுதிக் கொடுத்துவிட்டு ஓய்வு பெற்றார். மகனுக்குத் திருமணமும் செய்து வைத்து, அவர்களுடனேயே தங்கியும் விட்டார்.

ஒரு வருடம் போயிருக்கும். ஒரு நாள் வாக்கிங் போய் வந்தவருக்கு வழக்கத்துக்கு மாறாகச் சீக்கிரமே பசித்தது. ''டிபன் ரெடியாம்மா?'' என்று மருமகளிடம் கேட்டார். ''நைட் மீந்துபோன இட்லியை உப்புமா பண்ணியிருக்கேன். அது மட்டும்தான் மாமா இருக்கு'' என்று அவருக்கு வைத்தாள். அவர் சாப்பிட்டுவிட்டு அறைக்குப் போனதும் மகன் சாப்பிட வந்தான். அவனுக்கும் தனக்கும் பூரி எடுத்துக்கொண்டு வந்தாள் மனைவி.

நடந்த உரையாடலை அவன் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். அப்பாவுக்குப் பூரி ரொம்பப் பிடிக்கும். அது தன் மனைவிக்கும் தெரியும். ஆனாலும் பழைய உப்புமாவை அவருக்குக் கொடுத்துவிட்டுப் பூரியைத் தங்களுக்கு வைக்கிறாளே என நினைத்தான். ஒன்றும் பேசாமல் ஆபீஸ் கிளம்பினான். அன்று முழுக்க அந்தச் சிந்தனையே அவன் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

மறுநாள் காலையில் வீட்டுக்கு வக்கீல் வந்தார். அப்பாவை அவன் அழைத்தான். ''என்னப்பா இது? எதற்கு வக்கீல் வந்திருக்கிறார்?'' என்று அப்பா கேட்டார். ''என் பெயரில் எழுதிய அனைத்தையும் உங்கள் பெயருக்கே மாற்றிக்கொள்ளுங்கள். இனி வீட்டிலும் தொழிலிலும் நான் உரிமை கொண்டாட மாட்டேன். மாதா மாதம் சம்பளம் வாங்கும் சராசரித் தொழிலாளியாக இருக்கப் போகிறேன். நானும் என் மனைவியும் வாடகை வீட்டுக்குக் குடிபோகிறோம்'' என்றான்.

''ஏன் இந்தத் திடீர் முடிவு?'' என்று பதறினார் அப்பா. ''இல்லை அப்பா! உங்கள் மதிப்பு என்னவென்று என் மனைவிக்கு உணர்த்த வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. பிடித்த உணவுக்காக நீங்கள் கையேந்தும் நிலை வரக்கூடாது'' என்றான் மகன்.

அடையாளம் தந்தவர்களை அலட்சியம் செய்யக்கூடாது. ●

# பேசப்படாத தியாகம்!

பெரும்பாலான நேரங்களில் அம்மாவே பிள்ளைகளின் அருகில் இருப்பதால், அம்மாவின் அன்பையும் தியாகத்தையுமே பிள்ளைகள் அதிகம் போற்றுகின்றனர். அப்பா என்ன செய்கிறார் என்பதைப் பல பிள்ளைகள் அறிவதில்லை. அவரின் பெருமைகளைப் பல அம்மாக்கள் சொல்வதில்லை. சில அம்மாக்களோ, அப்பாவைப் பற்றிய குறைகளைப் பிள்ளைகளிடம் சொல்லி அவர்கள் மனத்தில் தங்களை அறியாமலே எதிரான எண்ணங்களை விதைக்கின்றனர். பேசப்படாத அப்பாவின் தியாகம் உயர்ந்தது.

● குழந்தையை அம்மா பத்து மாதங்கள் கருவில் சுமக்கிறார், அப்பா காலம் முழுக்க நெஞ்சில் சுமக்கிறார். இருவருமே சமம்தான். ஆனாலும் அப்பாவின் அன்பும் தியாகமும் இரண்டாம்பட்சமாகக் கருதப்படுகின்றன.

● அம்மா சம்பளம் இல்லாமல் குடும்பத்திற்கு உழைக்கிறார். அப்பா தான் உழைத்து சம்பாதித்த சம்பளத்தை முழுக்கவும் குடும்பத்திற்காகவே செலவிடுகிறார். அவர்களின் முயற்சிகள் இரண்டுமே சமம்தான். இருப்பினும் அப்பாவின் தியாகம் பேசப்படுவதில்லை.

● பிள்ளைகள் விரும்பியதை அம்மா சமைத்துத் தருகிறார், பிள்ளைகள் கேட்பதை அப்பா வாங்கித் தருகிறார். இருவரின் அன்பும் சமம்தான். ஆனால், அம்மாவின் பாசம் உயர்ந்ததாகக் காட்டப்படுகிறது. அப்பா இங்கும் பின்தங்கி விடுகிறார்.



● வெளியூர் போகும் பிள்ளைகள் போனில் முதலில் அம்மாவிடம்தான் பேசுகிறார்கள். எங்காவது காயம் ஏற்பட்டால், ‘அம்மா’ என்று அழுகிறார்கள். பணம், பொருள் என்று தேவைகள் ஏற்படும்போதுதான் அப்பாவை நினைவில் கொள்கிறார்கள். ஆனால், மற்ற நேரங்களில் பிள்ளைகள் தன்னை நினைவில்கூட வைத்திருப்பதில்லை என்று அப்பா எப்போதும் புலம்புவதில்லை. ஆனால், பிள்ளைகளிடமிருந்து அன்பைப் பெறும் விஷயத்தில், தலைமுறை தலைமுறைகளாக அப்பா எப்போதும் பின்தங்கியே இருக்கிறார்.

● அலமாரி முழுக்க அம்மாவின் வண்ணமயமான உடைகள் நிரம்பியிருக்கும். குழந்தைகளின் ஆடைகளும் ஏராளமாக அடுக்கியிருக்கும். ஆனால், அப்பாவின் உடைகள் மிகவும் குறைவுதான். அவர் தனது சொந்தத் தேவைகளைப் பற்றி எப்போதும் கவலைப்படுவதில்லை. ஆனாலும், அன்பைப் பெறுவதிலும் மதிப்பு கிடைப்பதிலும் அப்பா பின்தங்கியிருக்கிறார்.

● அம்மாவிடம் பல தங்க நகைகள் இருக்கும். குழந்தைகளுக்குக்கூட நகைகள் போட்டு அழகு பார்ப்பார்கள். ஆனால், அப்பாவுக்கென்று ஆபரணம் ஏதும் இருப்பதில்லை. தனக்கென்று எதுவும் அவர் வாங்கியதுமில்லை. இருந்தாலும் அப்பாவின் தியாகம் பேசப்படுவதில்லை.

● குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதற்காக அப்பா தினமும் கடினமாக உழைக்கிறார். ஆனால், அங்கீகாரத்தைப் பெறும்போது, அவர் எப்போதும் பின்தங்கியே இருக்கிறார்.

● பிள்ளைகளுக்குப் பள்ளி அல்லது கல்லூரிக் கட்டணம் செலுத்த வேண்டிய நேரத்தில், தனக்கான தேவைகளைக் குறைத்துக்கொண்டு அதைச் செய்ய உதவுகிறார் அம்மா. பிடித்த உணவை அம்மா செய்தால், பிள்ளைகள் அதிகம் சாப்பிட்டுவிடுவார்கள். அப்பா வெறும் ஊறுகாயைத் தொட்டுக்கொண்டு சமாளிப்பார். இருவரின் தியாகமும் சமம்தான். இருந்தாலும் அப்பாவின் தியாகம் பேசப்படுவதில்லை.

● பெற்றோருக்கு வயதானதும், ‘அம்மாவாவது வீட்டு வேலைகள் செய்வதில் பயன்படுகிறார், அப்பாவால் பயனில்லை’ என்கிறார்கள் பிள்ளைகள். பேரக்குழந்தைகளை வளர்ப்பதிலும், வெளிவேலைகளிலும் அவர் பங்கு பேசப்படுவதே இல்லை.

இப்படிப் பின்தங்கி இருக்கும் அப்பாவே, குடும்பத்தின் முதுகெலும்பாக இருக்கிறார். அதனால்தான் அவர் பின்னால் இருக்கிறார். முதுகெலும்பு நம்மை நிமிர வைப்பது போல, குடும்பத்தையும் நிமிர வைப்பது அப்பாவின் தியாகம்தான். ●


RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & SHIRTS
STAY STYLISH,
STAY MODERN




Available at Company Showrooms & All leading Textile Shops




Available at Company Showrooms & All leading Textile Shops



Kokhila®

CHEMISE • PANTIES • BRASSIERE

By

RAMRAJ

Shop Online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

**சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.**
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!


உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# புரிந்துகொள்ளும் தந்தையாக இருங்கள்!



அம்மா காபி கொண்டுவந்து கொடுத்ததும் மகன் முகம் சுளித்தான். "வர வர இந்த காபி டேஸ்ட்டே நல்லா இல்லை. இதைக் குடிக்கவே பிடிக்கலை" என்றவன், இன்னொரு காபித்தூள் பிராண்ட் பெயரைச் சொன்னான். "அது நல்ல டேஸ்ட்டா இருக்கும் தெரியுமா?" என்றான்.

"இதுக்கு என்ன குறை?" என்ற அம்மா, "அதுசரி, அந்த காபியை நீ எப்போ குடிச்சே?" என்று கேட்டார். "போன வாரம் குடிச்சேன். நல்ல வாசனை, அப்படி ஒரு சுவை. குடிச்ச பிறகு ரொம்ப நேரம் நாக்கில் அந்தச் சுவை இருந்துச்சு'' என்றான் மகன். ''அந்தக் காபித்தூள் ரெண்டு மடங்கு விலை. நம்ம குடும்பத்துக்கு அதெல்லாம் சரிப்படாது'' என்று தீர்மானமாகச் சொன்னார் அம்மா.

அடுத்த நாள் காலை மகனுக்கு ஆச்சர்யம். அவன் வர்ணித்த அந்த புது காபி அவனுக்குக் கிடைத்தது. "விலை அதிகம்னு சொன்னே... அப்புறம் எப்படிம்மா?" என்றான். "நீ ஆசையா கேட்டது அப்பா காதில் விழுந்திருக்கு. அவர் நேத்து ராத்திரியே வாங்கி வந்துட்டார்'' என்றார் அம்மா.

இரண்டு மடங்கு விலை என்றாலும், மகனின் ஆசையே முக்கியம் என்கிற இந்தப் புரிந்துகொள்ளலே தந்தையின் சிறப்பு. பிள்ளைகளைப் புரிந்துகொண்ட தந்தையாக இருப்பது எப்படி?

❖ நாம் நினைப்பது போல நம் பிள்ளைகள் வளர்வதில்லை. நம் விருப்பங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக அவர்கள் பிறக்கவில்லை. தாங்கள் என்னவாக ஆக வேண்டும் என்று அவர்களுக்குச் சில விருப்பங்கள் இருக்கலாம். அதைப் புரிந்துகொள்ளுங்கள். அவர்களின் லட்சியம் நிறைவேற உதவுங்கள்.

❖ 'நான் நினைப்பது போல என் பிள்ளைகள் வாழ்ந்தால்தான் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்' என்று வற்புறுத்த வேண்டாம். எது மகிழ்ச்சி என்பதிலேயே அவர்களுக்கு வேறு கருத்துகள் இருக்கலாம்.

❖ 'இதுதான் உன் எதிர்காலத்துக்குச் சிறந்தது' என்று எதையும் திணிக்காதீர்கள். அவர்களைக் கட்டுப்படுத்தாதீர்கள். அவர்களின் சுதந்திரத்தைப் பறித்தால், அவர்கள் உங்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகுவார்கள். திறந்த மனதுடன் அவர்களின் முடிவுகளை அலசுங்கள். அது தவறாக இருந்தால் நெறிப்படுத்துங்கள்.

❖ பிள்ளைகள் எடுக்கும் முடிவுகளையும், அவர்கள் தேர்வு செய்யும் சாய்ஸ்களையும் ஆதரியுங்கள். வளர வளர, அவர்கள் செல்லும் பாதையில் பல பிரச்னைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள நேரிடும். அந்த நேரங்களில் தந்தையின் வழிகாட்டலையும் ஆதரவையும் அவர்கள் அதிகம் எதிர்பார்ப்பார்கள். அதைக் கொடுங்கள். அவர்கள் தங்கள் பாதையில் சறுக்கினாலும்கூட, தந்தையின் அன்பு குறையாது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

❖ நாம் வாழ்ந்த சூழல் வேறு, காலமும் வேறு. நம் பிள்ளைகள் வேறொரு தலைமுறையின் அடையாளங்கள். அந்தத் தலைமுறையின் தாக்கமே அவர்களிடம் இருக்கும். “நாங்கள் எல்லாம் அந்தக் காலத்துல” என்று ஆரம்பித்து அறிவுரை பொழியாமல், நவீன கால மதிப்பீடுகளை வைத்து அவர்களைப் புரிந்துகொள்ளுங்கள்.

❖ நாம் 100% கச்சிதமானவர் இல்லை. நம் பிள்ளைகளும் அப்படித்தான். நம்மிடம் இல்லாத கச்சிதத்தை அவர்களிடம் எதிர்பார்க்காதீர்கள். அவர்களும் தவறு செய்வார்கள். 'பாதுகாக்கிறேன் பேர்வழி' என்று அவர்களின் செயல்பாட்டை முடக்காதீர்கள். தவறுகள் செய்தே அவர்கள் கற்றுக்கொள்வார்கள். குத்திக் காயப்படுத்தாமல், தவறுகளைச் சரிசெய்யும் வழிகளை மட்டும் காட்டுங்கள்.

❖ வளரும் பருவத்தில் அவர்கள் பல கடினமான தருணங்களைக் கடந்து வருவார்கள். உணர்வுரீதியாகக் குழப்பங்கள் ஏற்படும். சூழலும் நண்பர்களும் பல சவால்களைத் தரக்கூடும். அதை அவர்கள் தங்கள் செயல்களிலும் சொல்லிலும் வெளிப்படுத்துவார்கள். அதனால் கோபப்பட்டுத் திட்டாதீர்கள். அவர்களின் பிரச்னைகளை அவர்களின் இடத்திலிருந்து பாருங்கள். “நான் இருக்கிறேன்” என்று அரவணையுங்கள். அவர்கள் மனம்திறந்து பேச முடிகிற நெருக்கத்தில் இருங்கள்.

❖ பள்ளி செல்ல ஆரம்பிக்கும் நாளிலிருந்து கல்லூரி முடிக்கும் நாள் வரை ஏகப்பட்ட அழுத்தங்களை ஒரு பிள்ளை சந்திக்கிறது. வேலைக்குப் போக ஆரம்பிக்கும்போது வேறுவிதமான பிரஷர் சேர்ந்துகொள்கிறது. இத்தனைக்கும் நடுவில் தேவையற்ற எதிர்பார்ப்புகளை நீங்களும் பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள். தங்களால் அடைய முடிகிற இலக்குகளை அவர்கள் வரையறுத்துக் கொள்ளட்டும். தங்கள் முழுத்திறனையும் பயன்படுத்தி அதை அவர்கள் அடைவதற்கு வழிகாட்டுங்கள். ●

## வாசகர் கடிதங்கள்!

'வெண்மை' பெருமை சிறப்பிதழில் அத்தனை கட்டுரைகளும் அருமை. 'வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கிற பெருவாழ்வை வாழ்வதற்கு அடுத்த தலைமுறையினருக்குச் சொல்லிக் கொடுப்போம்' என்ற நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனின் யோசனை பயனுள்ளது.

*– கே.ரமேஷ், சூரமங்கலம், சேலம்.*

பெருமைக்குரிய மனிதராக ஒவ்வொருவரும் மாற வழிகாட்டிய 'வெண்மை' பெருமை சிறப்பிதழில் ஒவ்வொரு வரியும் பெருமைக்குரியது. நற்சிந்தனைகளை விதைப்பதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தனித்துவம் பெறுகிறது.

*– ஜீவதாஸ், திரேஸ்புரம், தூத்துக்குடி.*

தொடர்ந்து 'வெண்மை' இதழ் படித்துவருகிறேன், அருமை. இதன் வாசகர் என்கிற முறையில் நான் பெருமை அடைகிறேன். ஆசிரியர் கடிதம், கதை நேரம், பெருமைக்குரிய 3 நபர், பெருமை மொழிகள், பெருமையில் பணிவு வேண்டும், பெருமைக்குரிய உழைப்பாளியாக இருங்கள் என 'பெருமை' சிறப்பிதழில் அனைத்துமே சிறப்பு. உங்கள் அனைவரின் உழைப்பிற்கு நன்றி.

*– கே.வெங்கடேஷ், பட்டுக்கோட்டை.*

'பெருமை சிறப்பிதழ்' படித்துக் களிப்புற்றேன். பெருமைக்குரிய உழைப்பாளியாகவும், பெருமைப்படும் வாழ்க்கைத்துணையாகவும், பெருமைப்படும் பெற்றோராகவும் எப்படி இருக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்தமை மனதைக் கவர்ந்தன. வெண்மை இதழுக்கும் வெளியிடும் குழுவிற்கும் நன்றிகள் பல.

*– அருள்நிதி முத்துராமன், திருவண்ணாமலை.*



# தந்தையின் பொறுப்புகள்!

குழந்தை வளர்ப்பில் அம்மாவைப் போலவே அப்பாவுக்கும் பல பொறுப்புகள் இருக்கின்றன. பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்லும் நவீன காலத்தில் அப்பாவின் பொறுப்புகள் அதிகரித்துள்ளன. வெறுமனே குடும்பத்துக்குப் பணம் செலவழிப்பது, பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவது ஆகியவற்றைத் தாண்டி அவர்களின் அக்கறை அதிகரித்துள்ளது. பிள்ளைகளுடன் நேரம் செலவிட்டு, அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு, அவர்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாக இருந்து வளர்க்க வேண்டியது தந்தையின் பொறுப்பு.

அப்படி உடலாலும், உணர்வாலும், மனதாலும் பிள்ளைகளுக்கு உதவவேண்டிய பொறுப்பு தந்தைக்கு உள்ளது. அதனால் கிடைக்கும் நன்மைகள் பல:

❖ தாயுடன் தந்தையும் இணைந்து அன்பு செலுத்தும்போது குழந்தை பேசுவது, பேச்சைக் கேட்பது என்று எல்லாவற்றையும் சீக்கிரமே சிறப்பாகச் செய்கிறது. அவர்களின் ஐம்புலன்களும் கூர்மையடைகின்றன. எவருடனும் எளிதாக ஒட்டிக்கொள்ளும் பண்பையும் பெறுகிறது.

❖ குழந்தை வளர்ப்பில் தந்தை கூடுதல் அக்கறை காட்டினால், பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். தந்தையின் வழிகாட்டலில் வளரும் பிள்ளைகள், தவறான பாதையில் வழிதவறிச் செல்லும் வாய்ப்புகள் மிகக் குறைவு.

❖ குடும்பத்தில் எல்லோருடனும் அன்பாக நடந்து, எந்தப் பிரச்னையையும் கோபப்படாமல் தீர்த்து வைக்கும் தந்தையைப் பார்த்து வளரும் குழந்தைகள், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உற்சாகமாக இருக்கும் இயல்பைப் பெறுகிறார்கள். நண்பர்கள் உட்பட எல்லோரிடமும் அன்பாகப் பழகி நற்பெயர் வாங்குகிறார்கள்.

❖ ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடுவது, உடலை நன்றாக வைத்துக்கொள்வது, எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவது என்று இருக்கும் தந்தையை ரோல்மாடலாகப் பார்த்து வளரும் குழந்தைகள், ஆரோக்கியமான வாழ்வைப் பெறுகிறார்கள். அவர்களின் நடத்தையும் சிறப்பாக இருக்கிறது.

❖ குடும்பத்துக்காகச் சம்பாதிப்பது மட்டுமின்றி, வீட்டு வேலைகளையும் பகிர்ந்துகொண்டு செய்யும் தந்தையைப் பார்க்கும் குழந்தைகள், எல்லா வேலைகளின் சிரமங்களையும் உணர்கிறார்கள். உழைப்பின் அருமையும் புரிந்து வளர்கிறார்கள். பணத்தையும் உழைப்பையும் மதிக்கக் கற்கிறார்கள். எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி பார்த்து மரியாதை தருகிறார்கள்.

❖ ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல, எந்த ஒரு விஷயத்துக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட கோணங்கள் இருக்கலாம். ஒருவர் பார்வையில் தவறாகத் தெரியும் ஒரு விஷயம், இன்னொருவருக்குச் சரியாகத் தோன்றலாம். இப்படிப் பல கோணங்களில் எதையும் அலசத் தெரிந்த தந்தையின் வழிகாட்டல் பெறும் குழந்தைகள், வாழ்க்கை விதிகளை எளிதில் கற்றுக்கொள்வார்கள். எந்தப் பிரச்னைக்கும் சுலபமாகத் தீர்வு காண்பார்கள்.

❖ பொத்திப் பாதுகாக்கிற அன்பு அம்மாவுடையது. பிள்ளைகள் புதிதாக எதையாவது முயற்சி செய்தால், ‘அதெல்லாம் வேண்டாம்’ என்று அம்மா தடுப்பதற்குக் காரணம், பிள்ளைக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்ற அக்கறை. ஆனால், முயற்சி செய்து விழுந்து அடிபட்டால்தான் கற்றுக்கொள்ள முடியும் என்று திக்குத் தெரியாத காட்டில் தள்ளிவிடுவது அப்பாவின் இயல்பு. பிள்ளைகளின் ஆர்வத்துக்கு அணைபோடாமல் இருக்க வேண்டியதும் அப்பாவின் பொறுப்பு.

❖ பிள்ளைகளுக்கு நம்பகமான முதல் நண்பனாக இருப்பதும் அப்பாவின் பொறுப்பு. பொறுமையாக எதையும் கேட்டு, அவர்களின் குழப்பங்களைத் தீர்த்து வழிநடத்தும் நண்பனாகத் தந்தையைப் பெற்றவர்கள் பாக்கியவான்கள்.●

# அக்கறையான அப்பா!

அம்மா, அப்பா, அண்ணன், தங்கை, அக்கா, தம்பி, தாத்தா, பாட்டி என ஒவ்வொரு உறவும், அந்த உறவுகளுக்கான உணர்வுகளும்தான் நம் வாழ்வின் ஆதாரம். கருவில் தாங்கிக் குழந்தையை உருவாக்கும் அன்னையின் பந்தமானது ரத்தத்தால் இணைக்கப்படும். அப்பாவின் பந்தமோ, உணர்வுகளால் உணரப்படும்.

தந்தை என்ற உறவு சரியாக அமைந்தால் ஒவ்வொருவரின் தலையெழுத்தும் பிரகாசமாக எழுதப்படும். பிள்ளைகளின் பண்புகள் மற்றும் நடத்தைக்கு ரோல் மாடலே அப்பா தான். அப்பாவின் கைப்பிடித்து நடக்கும் அனுபவம், எப்படிப்பட்ட பரிசுக்கும் ஈடாகாது. அப்பா முதுகில் சுமந்து உப்பு மூட்டை தூக்கும்போது, குழந்தையின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். அப்பாவின் கரம் பிடித்து நடக்கையிலே, கவலைகள் அனைத்தும் மறந்து போகும். பிள்ளைகள் துவளும்போது, ‘நான் இருக்கிறேன், எதற்கும் கவலைப்படாதே’ என்னும் நம்பிக்கையைக் கொடுப்பார். பிள்ளைகளுக்கு அவரே நிழலாக இருப்பார். எதிர்க்காற்றில் முட்டிமோதி முன்னேறும் வலிமையை அவர் கொடுக்கிறார். எதையும் எதிர்கொண்டு போராடும் எதிர்நீச்சலை, அக்கறையான அப்பாவே கற்றுத் தருகிறார்.



அக்கறையான அப்பா, தன் குழந்தையைத் தினம் தினம் கொஞ்சி முத்தம் கொடுப்பதில்லை. அம்மா போல அரவணைப்பதில்லை. ஆனாலும் அவர் மனத்தில் அன்பு இருக்கிறது. அந்த அன்பு ஆழமானது. சில சமயங்களில் அது ரகசியமாகி விடுகிறது. சில நேரங்களில் கண்டிப்பு காட்டினாலும், அது குழந்தையின் நன்மைக்காகவே இருக்கும். ஆனால், பிள்ளைகளுக்கு உடல்நலக்குறைவு என்றால் பதறிவிடுவார். அவர்கள் சாப்பிடாமல் தூங்கிவிட்டால், எழுப்பிச் சோறூட்டி மீண்டும் தூங்க வைப்பார்.

ஓர் ஆசிரியர் வகுப்பில் பாடம் சொல்லித் தருகிறார் என்றால், வாழ்க்கைப்பாடங்கள் எல்லாவற்றையும் சொல்லித் தருபவர் தந்தை. பிள்ளைகள் தங்கள் திறமையைச் சரியான விதத்தில் பயன்படுத்தி முன்னேறுவதற்கு அவரே வழிகாட்டுவார். தோல்வியில் துவண்டு சோர்ந்து போகும்போது, உற்சாகப்படுத்தி மீட்டு வெற்றிப்பாதையை நோக்கி அனுப்பிவைப்பார். அப்பாவின் வார்த்தைகளே அவர்கள் ஜெயிக்கப் போதுமானவை. எல்லாவற்றிலும் சிறந்ததையே தங்கள் பிள்ளைகள் எப்போதும் பெற வேண்டும் என்ற ஆசை அப்பாக்களுக்கு இருக்கும்.

ஒரு குழந்தையின் முதல் பாதுகாப்பு வளையம், அப்பா ஏற்படுத்துவதுதான். நாட்டின் பிரதமருக்கு போலீஸார் தரும் பாதுகாப்பைவிட அது பலமானது. ‘இதுதான் என் பிள்ளைக்குச் சரியானது’ என்று அப்பா நினைக்கும் விஷயங்கள் மட்டுமே அந்தப் பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி வர முடியும். எது நல்லது, எது கெட்டது என்று பிரித்துப் பார்த்து அவர்களுக்கு வழிகாட்டுவார். தவறான சாய்ஸ்களைத் தேர்வு செய்தால் ஏற்படும் ஆபத்துகளைப் பக்குவமாகச் சொல்லிப் புரிய வைப்பார். ஒரு குழந்தை நல்ல பெயர் எடுக்க தந்தையின் வழிகாட்டுதலே முதல் காரணம்.

அப்பாவைப்போல உற்சாகப்படுத்தும் தோழமை கிடைக்காது. பிள்ளைகளின் வெற்றியில் அவர் அடையும் பெருமிதம் முகத்தில் பிரகாசமாக வெளிப்படும். ‘அப்பா சொல்வதே சரியாக இருக்கும்’ என்று நம்பும் பிள்ளைகள், எந்தச் சந்தேகம் என்றாலும் அவரிடம் ஓடுவார்கள். எப்படிப்பட்ட பிரச்னை என்றாலும், அவரின் ஆலோசனை தேடுவார்கள். நல்ல தந்தையே நம்பிக்கை வெளிச்சம் பரப்புகிறார்.



# கிராமிய சேவைத் திட்ட பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்தார் ரோஜா!



அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் உருவாக்கிய நெறிகளின்படி உலக சமுதாய சேவா சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் சார்பில் கிராமிய சேவைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து, அங்குள்ள அனைவருக்கும் இலவசமாக மனவளக்கலை பயிற்சி தருவது இந்தத் திட்டத்தின் நோக்கம். இதனால் உடல்நலனும் மனநலனும் மேம்படும். அறிவுத்திறனும் நற்பண்புகளும் மேம்பட்டு, முழுமை நல வாழ்வு பெற்று இன்பமாக வாழலாம். சமுதாய நலனும் மேம்பட்டு அந்த ஊரே ஆரோக்கியமான, அமைதியான கிராமமாக மாறிவிடும்.

ஆந்திர மாநில கலாசாரம், விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. ஆர்.கே.ரோஜா அவர்கள், ஆந்திராவின் வடமலாபேட்டை மண்டலம், காயம் கிராமத்தில், கிராமிய சேவைத் திட்ட யோகா பயிற்சி முகாமை 14.5.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று தொடங்கி வைத்தார். உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள், அமைச்சரை வரவேற்று உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் ஆர்.கே.ரோஜா அவர்கள், “அமைதி என்பது உடல்நலத்துக்கும், வாழ்க்கைக்கும் எப்படி நன்றாக உதவும் என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். பொதுவாக சம்பாதிப்பதற்காகப் படிக்கிறோம், அப்புறம் சம்பாதிப்பதற்காக ஓடிக்கொண்டே இருக்கிறோம். அதன்பிறகு குடும்பப் பொறுப்புகளுடன் ஒரு ஓட்டப்பந்தயமாக வாழ்க்கை மாறிவிடுகிறது. இதனால் எப்போதும் பதற்றத்துடன்தான் இருப்போம். அந்தப் பதற்றத்தைக் கட்டுப்படுத்த அமைதி தேவைப்படுகிறது. மன அமைதி இருந்தால்தான் சரியான முடிவுகளை எடுக்க முடியும். அந்த அமைதியை இலவசமாக அளிப்பதற்கே இந்த யோகா பயிற்சி முகாம் தொடங்கப்படுகிறது. இந்த முகாமிற்குப் போதிய ஒத்துழைப்பு கொடுத்து, அவர்கள் சொல்வதைக் கற்றுக்கொண்டால் ஒரு காசு செலவு இல்லாமல் பயன்பெறலாம்.

இதைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினால் போதுமென்று நினைக்காமல், ஆறு மாதப் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்து, இந்தப் பகுதியில் இருக்கும் அனைவரையும் ஒருங்கிணைத்து பயிற்சி அளிக்கின்றனர். இது குடும்ப அமைதியைக் கொடுக்கும். குடும்ப அமைதி என்பது ஒருவருடைய வார்த்தைக்கு ஒருவர் மதிப்பளிப்பது. அதுபோல் இருக்கும் ஒரு குடும்பம், நிச்சயமாக அமைதியாக இருக்கும். வீட்டிலிருக்கும் பெண்கள் மகிழ்ச்சியாக இருந்தால், அந்த வீட்டுப் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்” என்று கூறினார்.



விழாவில் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் திரு. ஆர்.கே.செல்வமணி அவர்கள், உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் அவர்கள், விஷன் அகாடமி இயக்குநர் பேராசிரியர் பெருமாள் அவர்கள், கிராமிய சேவைத் திட்ட இயக்குநர் திரு. முருகானந்தம் அவர்கள், இணை இயக்குநர் பேராசிரியர் வி.சுந்தரம் அவர்கள், ஒருங்கிணைப்பாளர் திரு. குரு ரங்கதுரை அவர்கள், திரைப்பட இயக்குநர் திரு. ஆர்.சுப்பிரமணியம் பாரதி அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளூர் மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# தொழில்முனைவோர் வழிகாட்டு நிகழ்வில் ராம்ராஜ்!

**கோ**வை இந்துஸ்தான் கல்லூரியில் ‘பிசினஸ் மூச்சு’ என்ற தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல் கருத்தரங்கு நடைபெற்றது. இளம் தொழில்முனைவோருக்குப் பயிற்சிகள் மூலம் புத்துணர்வு அளித்து, அவர்களைத் தொழிலின் அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்வதற்கான கருத்தரங்கு இது. இதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். தன் சொந்த வாழ்க்கை அனுபவங்களிலிருந்து ஒரு தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக வளர்த்துச் செல்வதற்கான வழிகளை அவர் விவரித்தார். ஒரு கனவை உருவாக்கி, அதை அடைவதற்கான இலக்குகளை நிர்ணயித்துக்கொண்டு, கச்சிதமான திட்டமிடலுடன் உழைத்து முன்னேறுவதற்கான சூத்திரங்களை திரு. கே.ஆர்.நாகராஜன் விளக்கினார். சுமார் 500–க்கும் மேற்பட்ட இளம் தொழில்முனைவோர் இதை ஆர்வத்துடன் கேட்டனர்.

இந்த நிகழ்வில் தன்னம்பிக்கைப் பேச்சாளர் டாக்டர் பர்வீன் சுல்தானா, மகிழ்ச்சியான வாழ்வுக்கான பயிற்சியாளர் திரு. முரளி சுந்தரம், பிசினஸ் மெண்டார் திரு. ஷௌகத் ஆகியோர் கலந்துகொண்டனர்.







# பள்ளியை அறிமுகம் செய்யுங்கள்!

பல ஆண்டுகளாகப் படிக்கும் பிள்ளைகளே, கோடை விடுமுறைக்குப் பிறகு மீண்டும் பள்ளி செல்ல முரண்டு பிடிப்பார்கள். முதன்முதலாகப் பள்ளி செல்லும் குழந்தைகள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களின் பயம் போக்கி, பள்ளியை ஒரு மகிழ்ச்சியான இடமாக அறிமுகம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கும் இருக்கிறது; ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. யூனிஃபார்ம், பேக், லஞ்ச் பாக்ஸ் என எல்லாம் வாங்கி ரெடியானாலும், சில அம்மாக்களுக்குப் 'பள்ளிக்கூடம் நம் குழந்தைக்குப் பிடிக்குமா, புதிய நண்பர்களோடு அனுசரித்துச் செல்லுமா, அங்கே ஒழுங்காகச் சாப்பிடுமா' என்றெல்லாம் ஏகப்பட்ட கவலைகள். இந்தக் கவலைகளைத் தீர்க்கச் சில வழிகள்:

❖ குழந்தைகளுக்குச் சாப்பாடு ஊட்டும்போதோ, அடம் பிடிக்கும்போது பணிய வைக்கும் முயற்சியிலோ, யாரையும் பூச்சாண்டியாகக் காட்டிப் பயமுறுத்தக் கூடாது. குழந்தைகளைப் பிறரோடு சேர்ந்து வெளியிடங்களில் விளையாட அனுமதிக்காமல் வளர்ப்பது, பூச்சாண்டி வருகிறார் என்று வித்தியாசமான பிம்பம் ஒன்றை மனதில் வளர்ப்பது ஆகியவை ஆசிரியர் பற்றிய பயத்திற்குக் காரணங்களாகிவிடும்.

❖ விளையாட்டுக்காகவோ, எரிச்சலிலோ, பள்ளியைப் பற்றிப் பயமுறுத்தும்விதமாகவோ எதுவும் சொல்லக்கூடாது. "நீ இப்படி அந்தப் பொம்மை வேண்டும் எனத் தொந்தரவு செய்தால் இப்போதே பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவேன். டீச்சர் உன்னை அடி பின்னிடுவாங்க" எனச் சொல்வது ஆபத்தானது. பள்ளி என்பது ஒரு சித்திரவதைக் கூடம் போலவும், 'யார் கிடைப்பார்கள், அடிக்கலாம்' என்று டீச்சர்கள் எல்லோரும் காத்திருப்பது போலவும் அவர்களின் மனதில் பதிந்துவிடும். ஆசிரியரைச் சந்திக்கும் முன்பே அவரைப் பற்றிய பய உணர்வை ஏற்படுத்தக்கூடாது.

❖ பள்ளியைப் பற்றிய மகிழ்ச்சியான சிந்தனைகள் குழந்தைகள் மனதில் உருவாக வேண்டும். அதற்குக் கல்வி குறித்து நல்ல விஷயங்களை அவர்களிடம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். "பள்ளிக்குச் செல்வது ஜாலியான புதிய அனுபவம். நண்பர்கள் நிறைய பேர் கிடைப்பார்கள். அவர்களோடு ஆடலாம், பாடலாம், விளையாடலாம். பள்ளிக்குச் சென்ற பின்பு நீ வேக வேகமாய் வளருவாய். எங்களை வளர்த்தது பள்ளிதான். நீயும் எங்களைப் போல வளர்வாய்" என்றெல்லாம் உற்சாகப்படுத்த வேண்டும்.

❖ பள்ளி திறக்கும் முதல் நாளில் அவசர அவசரமாகக் குழந்தையை அழைத்து வந்து, பள்ளியின் வாசலில் விட்டு, "உள்ளே போ" என்று சொல்லும்போது குழந்தைக்கு அது திடீர் திணிப்பு போல் தோன்றும். அவர்கள் அங்கேயே உதட்டைப் பிதுக்குவார்கள். பள்ளி திறக்கும் முன்பே அங்கு அழைத்துச் சென்று பழக்குங்கள். தயக்கம் அகன்று நெருக்கம் ஏற்படும்.

❖ குழந்தைகள் பொதுவாக அம்மாவோடு நெருக்கமாக இருக்கும். சிறிது நேரம் அம்மாவைப் பிரிவதே அவர்களுக்குக் கஷ்டமான அனுபவம். அதனால்தான் பள்ளிக்குச் செல்லத் தொடங்கும் தொடக்க நாட்களில், இந்தப் பிரிவை நினைத்து அழுகின்றனர். பள்ளியில் சேர்க்கும் முன்பே அவர்களை இப்படித் தனியாக இருக்கப் பழக்க வேண்டும். பொறுப்பானவர்களின் பாதுகாப்பில் குழந்தையை விட்டு விட்டு, சில மணி நேரங்கள் எங்காவது போய்வருவது எனப் பிரிவைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகம் செய்ய வேண்டும். 'இப்படிப் பிரிவதால் பாசம் குறையாது. அதிகரிக்கவே செய்யும்' என்ற உண்மையைக் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும்.

❖ பள்ளி திறப்பதற்கு முன்பே, குழந்தைகளைப் பள்ளி நேரத்திற்குப் பழக்கப்படுத்த வேண்டும். இஷ்டத்திற்குத் தூங்கி, நினைத்த நேரத்தில் விழிக்கும் குழந்தைகளைப் பள்ளிக்குக் கிளப்பும் நேரத்தில் பெற்றோர்கள் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகிறார்கள்.

❖ முதல் நாள் குழந்தை அழுதால் கவலைப்படாதீர்கள். காலம் முழுக்க அழும் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள். அழுகை அதுவாகச் சரியாகிவிடும். குழந்தை அழுவதை ஒரு பெரிய விஷயமாக வீட்டில் விவாதிக்க வேண்டாம்; மறுநாள் அழுதால் தண்டனை தருவேன் என்று மிரட்டவும் வேண்டாம். அழுதாலும் பள்ளி மீதான ஆர்வம் குறையாத அளவுக்குப் பார்த்துக்கொள்ளுங்கள், போதும்.

❖ ஏதோ ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்தோம், எல்லாக் குழந்தைகளையும் போல் நம் குழந்தையையும் அனுப்பி வைத்தோம் என்று இருக்க வேண்டாம். குழந்தைக்குக் கல்வி போலவே, வாழ்க்கைநெறிகளும் பாதுகாப்பும் முக்கியம். அதிலும் அக்கறை காட்டும் பள்ளியில் சேர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

❖ உங்கள் குழந்தை முதல் நாள் பள்ளியில் அடியெடுத்து வைக்கும்போதே, இன்றைய போட்டி நிறைந்த உலகத்திற்குள் அதுவும் பந்தயத்தில் குதித்துவிடுகிறது. அங்கே தாக்குப்பிடிக்க தளராத மனமும், பொறுமையும், கடும் உழைப்பும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், புரிந்து செயல்படும் ஆற்றலும், தோல்வியைக் கண்டு துவளாத மனதிடமும் தேவை. அவை இயல்பாக வளர நீங்கள் உதவுங்கள்.

❖ புத்தகப் பையில் தினமும் சேரும் தேவையற்ற பேப்பர்களை உதறிச் சுத்தம் செய்யும் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள். குழந்தைகளின் புத்தகப்பையை வாரம் ஒருமுறை காலி செய்து துடைத்து வையுங்கள். உணவுக்கூடையை அடிக்கடி சோப்பு கலந்த நீரில் கழுவிச் சுத்தம் செய்யுங்கள்.

❖ தண்ணீர் பாட்டிலை பிரஷ் போட்டுச் சுத்தம் செய்வதுடன், அவ்வப்போது வெதுவெதுப்பான தண்ணீரிலும் கழுவுங்கள். மூடியையும் சுடு தண்ணீரில் போட்டு எடுங்கள்.

❖ துவைக்காமல் போடும் சாக்ஸில் உள்ள அழுக்கு வியர்வையினால் குழந்தைக்கு நோய்த்தொற்று ஏற்படலாம், கவனம். ●


வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 7 இதழ் 12

ஜூன் 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

- அம்மாவின் அன்பு கடல் அலை போன்றது, வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். அப்பாவின் அன்போ நடுக்கடல் போன்றது, வெளியில் தெரியாது. ஆனால், ஆழம் அதிகம்.

- ஒரு குழந்தைக்கு உலகிலேயே பாதுகாப்பான இடம், அப்பாவின் அன்புக்கரங்களின் அரவணைப்பு மட்டுமே!

- கோடி ரூபாய் மெத்தையில் புரண்டாலும் வராத தூக்கம், தந்தையின் மார்பில் சாயும்போது வரும்.

- கடவுள் கொடுத்த வரம் அல்ல தந்தை, கடவுளாகவே வந்த வரம். உயிர் தந்த தந்தையைவிட உயர்ந்தவர் இந்த உலகில் இல்லை.

- ஆயிரம் மடங்கு அன்பை உள்ளே வைத்துக்கொண்டு, எதிரியைப் போல நடந்துகொள்ளும் ஒரே ஜீவன் அப்பா.

- கண்களில் கோபத்தையும் இதயத்தில் பாசத்தையும் வைத்திருக்கும் ஒரே உறவு, தந்தை மட்டுமே!

- ஆயிரம் உறவுகள் இருந்தாலும், அப்பா என்ற ஓர் உறவு இல்லாவிட்டால் அநாதைதான்.

- அப்பா என்பது ஓர் அதிசயப் புத்தகம். அது கிடைக்கும் வயதில் நம்மால் அதைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. புரிந்துகொள்ள நினைக்கும்போது அது கிடைப்பதில்லை.

- தெய்வத்திற்குத் தகப்பன் என்பதைவிடப் புனிதமான பெயர் இருக்க முடியாது.

- அப்பா என்னும் சக்கரம் சுழல்வதை நிறுத்திவிட்டால், குடும்பம் என்னும் தேர் நகர்வது கடினம்.

- அப்பா ஏழையாக இருந்தாலும், நம்மை ஒருபோதும் ஏழையாக வளர்க்க நினைத்ததில்லை.

- நமக்கு மிகவும் நம்பகமான முதல் நண்பனாக இருப்பது தந்தைதான்.

- அப்பா என்பது மந்திரச் சொல். நம் முகம் பார்த்துவிட்டு, உலகத்தை வென்றதாய் நினைக்கும் நல்ல ஜீவன்.

- நடிக்கவே தெரியாத நிஜக் கதாநாயகன் அப்பாதான். அப்பா என்றால் வெறும் வார்த்தை இல்லை. அப்பாவே வலிமை, அப்பாவே நம்பிக்கை.

# தந்தையின் பெருமை!



- தந்தையால் நேசிக்கப்பட்டு வளரும் ஒரு மகனே, தன் மகனால் நேசிக்கப்படும் அப்பாவாக மாறுகிறார்.

- அதிகம் பேசாத அழகான உறவு அப்பா. ஆயிரம் உறவுகளில் உன்னதமான உறவு அப்பா.

- ஒருமகன்தன்னம்பிக்கை இல்லாமல் துவண்டு போனாலும், அவன் மீது நம்பிக்கை வைத்து அவனை வெற்றியாளனாக மாற்ற, தந்தையால் முடியும்.

- நாம் ஆசைப்படும் அனைத்தையும் கொடுப்பவர் அப்பா என்ற உறவு மட்டுமே!

- வலிக்காத மாதிரி அடித்துவிட்டுத் தூங்க வைப்பவர் அம்மா. வலிக்கிற மாதிரி அடித்துவிட்டுத் தூங்காமல் தவிப்பவர் அப்பா.

- எல்லா அப்பாக்களும் ராஜாக்களாக இருப்பதில்லை. ஆனால், எல்லாப் பிள்ளைகளுமே இளவரசர்களாகவும் இளவரசிகளாகவும் அப்பாவால் வளர்க்கப்படுகிறார்கள்.

- சொந்தக் காலில் நிற்கும்போதுதான் தெரிகிறது, நம்மை இத்தனைக் காலம் சுமந்தவருக்கு எப்படி வலித்திருக்கும் என்று, ‘அப்பா’.

- தான் அனுபவித்த கஷ்டங்களைத் தன் பிள்ளைகள் ஒருபோதும் அனுபவிக்கக் கூடாது என்று நினைப்பதுதான் அப்பாவின் இதயம்.

- ‘உனக்கு நான் இருக்கிறேன்’ என எத்தனை பேர் சொன்னாலும், அப்பாவின் வார்த்தைகளுக்கு ஈடாகாது.

- ஒட்டுமொத்த பாரத்தையும் சுமந்துகொண்டு, தன் மகனையும் மகளையுமே உலகமாக நினைத்துச் சுற்றிவரும் ஒவ்வொரு தந்தையும் இந்த உலகத்தை அன்பால் இயக்குகிறார்கள்.

- ஒரு பெண்ணின் வாழ்வில் மகிழ்ச்சியான நாட்கள் என்றால், அவை அப்பாவுடன் வாழ்ந்த நாட்களே!



- அப்பாக்கள் எப்போதும் மகளின் பாசத்துக்கு அடிமை. மகள்கள் எப்போதும் அப்பாவின் பாசத்திற்குப் பேரடிமை.

- ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனுக்கு மகாராணியாக இல்லாமல் போகலாம். ஆனால், ஒவ்வொரு பெண்ணும் அவர் தந்தைக்கு இளவரசிதான்.

- தன் தலைக்கு மேலே உட்கார வைத்து அழகு பார்க்கும் அப்பாவை நாம் ஒருநாளும் தலைகுனிய வைத்துவிடக்கூடாது.

- தான் பார்த்த உலகத்தைத் தன் குழந்தைகளும் பார்க்க வேண்டும் என்று நினைப்பவர் அம்மா. தான் பார்க்காத உலகத்தைக்கூடத் தன் குழந்தை பார்க்க வேண்டும் என நினைப்பர் அப்பா.

- அப்பா... அது வார்த்தை அல்ல, நமக்கான வாழ்க்கை!


- மனைவிக்கு இது பிடிக்கும், மகனுக்கு அது பிடிக்கும், மகளுக்கு இது பிடிக்கும் என வாழும் அப்பாவுக்கு மறந்தே போய்விடுகிறது, தனக்கு என்ன பிடிக்கும் என்று!

- இயற்கையின் படைப்புகளில் மிக உன்னதமானது, தந்தையின் இதயம். ●



# முதல்முறை தந்தையாகும்போது...

பிரசவ அறையின் வாசலில் தவமாய்க் காத்திருந்து, குழந்தையின் முதல் அழுகுரலைக் கேட்டு, சில நிமிடங்களில் பசுந்தளிராகத் தனது குழந்தையைக் கரங்களில் ஏந்தும் தருணத்தில் ஓர் ஆண் தந்தை எனும் உணர்வைப் பெறுகிறார். ஆனால் உண்மை என்னவென்றால், மனைவி கருவுறும்போதே ஒவ்வொரு ஆணும் தந்தையாகிவிடுகிறார். முதல்முறை தந்தையாகும்போது பயமும் பதற்றமும் பலருக்கு இருக்கும். புதிரான ஒரு புது உலகத்தில் நுழையும் உணர்வு ஏற்படும். அதெல்லாம் தேவையற்ற பயம். இந்த உலகில் உங்களுக்கு முன்பு பல கோடி மக்கள் தந்தையாக இருந்து குழந்தைகளை வளர்த்திருக்கிறார்கள். அவர்களின் வரிசையில் நீங்கள் இணைகிறீர்கள். யாரும் செய்யாத ஒன்றை நீங்கள் செய்யப்போவதில்லை.



குழந்தை வளர்ப்புக்கு என்று பொதுவான கைடு எதுவும் இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது. அந்தக் குழந்தையைத் தனிப்பட்ட அனுபவங்களுடன்தான் வளர்க்க வேண்டும். என்றாலும் சில பொதுவான விஷயங்களை நினைவில் நிறுத்தலாம்.

❖ மனைவி கர்ப்பமான முதல் மூன்று மாதங்களுக்குள்ளாகவே எந்த மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது என்பதை முடிவு செய்ய வேண்டும். மனைவியின் ஊட்டச்சத்து நிலை, உடல்நிலை என்று எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். எந்த மருத்துவமனையில் பிரசவம் பார்க்கலாம் என்பதையும் முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது. ஒவ்வொரு முறையும் மனைவியுடன் டாக்டரைப் பார்க்க உடன் போவது சிறந்தது.

❖ யாருடைய ஆலோசனையைக் கேட்பது என்பது போலவே, யாரின் ஆலோசனையைக் கண்டுகொள்ளக்கூடாது என்பதிலும் தெளிவாக இருப்பது நல்லது. முதல்முறை தாயாகும் ஒவ்வொரு பெண்ணுக்கும் யார் யாரோ ஆலோசனை சொல்வார்கள். அக்கறையுடன் அவர்கள் சொல்வதில் நிறைய தவறான விஷயங்களும் இருக்கலாம். அனுபவமுள்ள மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்றுவதே சரியாக இருக்கும்.

❖ குழந்தையைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாதே, குழந்தையைப் பாதுகாப்பாக கையில் தூக்குவதைக்கூடக் கற்றுக்கொள்ளவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். ஒவ்வொருவரும் தந்தையான பிறகே அதையெல்லாம் கற்றுக்கொள்கிறார்கள். நீங்களும் கற்றுக்கொள்வீர்கள், கவலை வேண்டாம்.

❖ கர்ப்பம் தொடங்கி, குழந்தை பிறந்து வளரும் வரை ஏராளமான செலவுகள் அடுத்தடுத்து இருக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். எல்லாவற்றுக்கும் பணத்தை ஏற்பாடு செய்து வைத்துக்கொள்ளுங்கள்.

❖ நிறைய பேர் குழந்தைக்காக என்று பல விஷயங்களை முன்கூட்டியேவாங்கிவைப்பார்கள். உடைகளையும்வாங்கிக் குவிப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் சில நம்பிக்கைகளும் மரபுகளும் உள்ளன. அவற்றை மதித்து நடந்துகொள்ளுங்கள். குழந்தை சில மாதங்களில் தவழ ஆரம்பித்ததும் வீடு முழுக்கச் சுற்ற ஆரம்பித்துவிடும். ஏகப்பட்ட பொருட்களை வாங்கி வீடு முழுக்க அடைத்து வைத்தால், குழந்தை தடுமாறும். ஃபர்னீச்சர்கள் குறைவாகவும், காலியிடம் அதிகமாகவும் இருக்கும் வீடே, குழந்தைகளுக்குப் பொருத்தமான வீடு.

❖ பச்சிளம்குழந்தைகளாகஇருக்கும்போது, குழந்தைப் பராமரிப்பில் தந்தையின் பங்கு குறைவுதான். அப்போது குழந்தையின் அம்மாவுக்கே அதிக பராமரிப்பு தேவைப்படும். பிரசவ கால மன அழுத்தமும், ஒவ்வற்ற சூழலால்

ஏற்படும் எரிச்சலும் அம்மாக்களைப் பாடாகப் படுத்தும். அதைப் புரிந்துகொண்டு வாழ்க்கைத்துணைக்குப் பரிவுடன் உதவ வேண்டும். மற்ற நாட்களில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பது முக்கியமில்லை, இந்தக் கடினமான தருணங்களில் எப்படி ஆதரவாக இருக்கிறீர்கள் என்பதை மனைவி வாழ்நாள் முழுக்க ஞாபகம் வைத்திருப்பார்.

❖ இந்த நாட்களில் முக்கியமாகத் தூக்கம் பறிபோய்விடும். குழந்தையின் தூக்க நேரத்தைப் பொறுத்தே அம்மாவும் அப்பாவும் தூங்க முடியும். பகல் முழுக்கத் தூங்கும் குழந்தை, நள்ளிரவில் நீண்ட நேரம் விழித்திருக்கக்கூடும். குழந்தை தூங்கும் நேரத்தில் அப்பாவும் அம்மாவும் மாறி மாறித் தூங்கப் பழகுவதே ஒரே வழி.

❖ இத்தனை நாட்களாகக் கணவனும் மனைவியும் மட்டுமே என்றிருந்த வாழ்க்கையை ஒரு குழந்தை தலைகீழாக மாற்றிவிடும். பெரும்பாலான நேரம் குழந்தையுடனே மனைவி நேரம் செலவிட நேரும் என்பதால், தந்தை தனியாகவே இருக்க வேண்டும். இந்தத் தனிமைக்குப் பழகிக்கொள்ள வேண்டும்.

❖ பச்சிளம் குழந்தைகள் திடீர் திடீரென காரணமே இல்லாமல் அழுவார்கள். ஆறுதல்படுத்தினாலும் அழுகையை நிறுத்தாதபோது குழப்பமே வரும். அந்த நேரத்தில் அவசரமாக டாக்டரிடம் போவதற்கு எப்போதுமே தயாராக இருக்க வேண்டும்.

❖ குழந்தையுடன் அம்மாவுக்குப் பிணைப்பு ஏற்படுவது போலவே அப்பாவுக்கும் பிணைப்பு வர வேண்டியது முக்கியம். பச்சிளம் குழந்தைக்குக் காட்சிகள் தெளிவாகத் தெரியாது என்றாலும், தங்கள் அருகில் இருப்பவரின் வாசனை, குரல், அரவணைப்பு ஆகியவற்றை உணர முடியும். குழந்தையைக் கொஞ்சுவது, பாடுவது, அவர்களைப் பாதுகாப்பாகத் தூக்கிவைத்து தாலாட்டுவது என்று அப்பாவின் கடமைகளைச் செய்யுங்கள். குழந்தை உங்களுடனும் ஒட்டிக்கொள்ளும்.

❖ குழந்தையின் உடைகள், பொம்மைகள், மருந்துகள் என்று வீடு முழுக்க ஏராளமான பொருட்கள் திடீரென எங்கெங்கும் காணப்படும். இவற்றுக்கு நடுவில்தான் அம்மாவும் அப்பாவும் புழங்க வேண்டியிருக்கும். இந்த வாழ்க்கைக்கும் பழகிக்கொள்ளுங்கள்.





❖ குழந்தை கொஞ்சம் வளர ஆரம்பித்ததும் வீடு முழுக்கத் தவழ ஆரம்பித்துவிடும். அப்போது வீட்டை அவர்களுக்குப் பாதுகாப்பானதாக மாற்றிவைப்பது அப்பாவின் கடமை. உயரத்திலிருந்து குழந்தை பிடித்து இழுக்க முடிகிற பொருட்களை அப்புறப்படுத்துவது, கூர்மையான முனையுள்ள பொருட்களை அகற்றுவது, குழந்தை வாயில் போட்டுக்கொள்கிற சைஸில் இருக்கும் பொருட்கள் எதுவும் கையில் கிடைக்காமல் பார்த்துக்கொள்வது, காயங்கள் ஏற்படாதபடி தரையைச் சுத்தமாக வைத்துக்கொள்வது எல்லாம் முக்கியம்.

❖ குழந்தையைச் சாப்பிட வைப்பதில் உதவுவது, தண்ணீர் குடிக்க வைப்பது போன்றவற்றிலும் அப்பாவின் பங்கு தேவைப்படும். சாப்பிட மறுக்கும் குழந்தையை வேடிக்கை காட்டிச் சாப்பிட வைக்கலாம். சாப்பிட்ட பிறகு குழந்தையைச் சுத்தம் செய்வது, குழந்தையைக் குளிப்பாட்டுவதில் உதவி செய்வது என்று செய்யும்போது தந்தைக்கும் குழந்தைக்கும் நல்ல பிணைப்பு ஏற்படும்.

❖ குழந்தை நடக்கப் பழகிய பிறகு முதல்முதலாக வெளியில் கூட்டிச்செல்வது ஒரு பரவச அனுபவம். வீட்டுக்கு வெளியில் இருக்கும் மாபெரும் உலகத்தைக் குழந்தைக்கு ஒரு தந்தை அறிமுகம் செய்ய ஆரம்பிப்பது இந்தப் பயணத்தில்தான். இதுபோன்ற நிறைய பயணங்களும், குழந்தையின் கேள்விகளுக்குத் தந்தை சொல்லும் பதில்களும் அந்தக் குழந்தைக்குப் புது அனுபவங்களைத் தரும். தந்தையுமே புது அனுபவங்களைப் பெறுவார். ●



## அவன் வளர்ந்துவிட்டான்!

அம்மாவுக்கு எல்லாமே புதிராக இருந்தது. மகன் வேலைக்குப் போய் சம்பாதிக்க ஆரம்பித்து ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், அவன் தன் வருமானத்தை என்ன செய்கிறான் என்று அப்பாவிடமும் சொல்லவில்லை, அம்மாவிடம் சொல்லவில்லை. அம்மா கேட்கத் தயங்கினார். "அவன் ஏதாவது தண்டச் செலவு பண்ணிடப் போறான். நீங்களாவது கேளுங்க" என்று கணவரிடம் வற்புறுத்தினார். ஆனால், "அவன் இப்போது வளர்ந்துவிட்டான். தப்பாக எதையும் செய்ய மாட்டான். நாம் எதையும் கேட்க வேண்டாம். அவனாக வந்து சொல்வான். பொறுமையாகக் காத்திரு" என்று சொன்னார் அவர்.

அந்த வார இறுதியில் ஒருநாள் மகன் சீக்கிரமே வீட்டுக்கு வந்து காலிங் பெல் அடித்தான். "வெளியில் வந்து பாருங்க" என்று இருவரையும் கூப்பிட்டான். அப்பாவும் அம்மாவும் வந்து பார்த்தால், புத்தம் புது கார் நின்றிருந்தது. "உன் காரா?" என்று மகனிடம் கேட்டு மகிழ்ந்தார் அம்மா. "இல்லம்மா, இது உங்க கார். நீங்க பயன்படுத்தறதுக்காக நான் வாங்கித் தர்ற பரிசு" என்றான் மகன். "நீங்க சொன்னது சரிதான். நம்ம பையன் வளர்ந்துவிட்டான்" என்று அப்பாவிடம் நெகிழ்ச்சியாகச் சொன்னார் அம்மா.



## பாசக்கார சிங்க அப்பா!

சிங்கங்களைப் பொறுத்தவரை குட்டிகளுக்கு உணவு தேடித் தருவதில் ஆரம்பித்து, குட்டிகளைப் பார்த்துக்கொள்வது வரை முழுக்க முழுக்க, தாய் சிங்கங்களின் பொறுப்பு. அப்பா சிங்கத்துக்கு இந்த விஷயத்தில் எந்த வேலையும் கிடையாது. ஆனால், அன்னையின் அன்பைத் தந்தை ஈடுசெய்யும் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இந்தியாவில் குஜராத் காடுகளில் மட்டும்தான் இன்னமும் சிங்கங்கள் வாழ்கின்றன. இங்கு பெதியா என்ற கிராமத்தை ஒட்டிய காடுகளில் வாழ்கிறது 'பெதியா நார்' என்ற ஆண் சிங்கம். இந்தச் சிங்கத்தின் துணையான பெண் சிங்கம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காடுகளைத் தாண்டி நிலங்களுக்குள் நுழையும்போது மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துவிட்டது. அப்போது இந்த ஜோடியின் மூன்று குட்டிகளும் பிறந்து மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை.

பொதுவாக, சிங்கங்கள் கூட்டமாக வாழும். இதுபோன்ற தருணங்களில், கூட்டத்தில் இருக்கும் வேறு பெண் சிங்கங்கள் குட்டிகளை வளர்த்தெடுக்கும். ஆனால், இந்தச் சிங்கக் கூட்டத்தில்

## இப்போதும் கொடுத்தார்!

தந்தை தன்னைச் சிரமப்பட்டுப் படிக்க வைப்பதால், எப்போதுமே தன் தேவைகளுக்குப் பணம் கேட்கத் தயங்குவான் மகன். ஆயிரம் ரூபாய் தேவைப்படும் தருணத்தில், “500 ரூபாய் கிடைக்குமாப்பா” என்று தயக்கமாகக் கேட்பான். அப்பா ஆயிரம் ரூபாய் தருவார். தன் தேவை எவ்வளவு என்று உணர்ந்து, பல சமயங்களில் கேட்காமலே பணம் கொடுக்கும் அப்பாவின் குணத்தைப் பார்த்து ஆச்சர்யப்படுவான் அவன். அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது, அப்பா கணக்குப் பார்த்து பணம் தருவதில்லை, அன்பின் மிகுதியால் தருகிறார் என்பது!

மகன் வேலைக்குப் போய் முதல்முறையாக ஊருக்கு வந்திருந்தான். விடுமுறை முடிந்து திரும்பவும் கிளம்பும்போது, “பணம் இருக்காப்பா” என்றார் அப்பா. அவன் தன் பர்ஸை எடுத்து, உள்ளே இருந்த 500 ரூபாய் நோட்டுகளைக் காட்டினான். அப்பா அப்போதும், “வழியில் சில்லரை தேவைப்படும், வச்சுக்கோ” என்று சில 100 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தார்.

## அப்பா மாறவே இல்லை!

கல்லூரி முடித்த மகன், வேலையில் சேர்ந்து முதல் மாதச் சம்பளம் வாங்கினான். 40 ஆயிரம் ரூபாய். அப்பா வாழ்நாள் முழுக்க உழைத்து இப்போதுதான் அந்தச் சம்பளத்தை எட்டிப் பிடித்திருக்கிறார். அவன் முதல் மாதத்திலேயே அதை வாங்குகிறான். முதலில் இதை அப்பாவுக்குச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டான். ‘பொறுப்பில்லாம ஊர் சுத்தறே’, ‘வண்டியை ஏன் இவ்ளோ வேகமா ஓட்டறே’, ‘எங்கே சுத்திட்டு ராத்திரி லேட்டா வர்றே’ என்றெல்லாம் எப்போதும் திட்டும் அப்பா இப்போது தன் பெருமையை உணரட்டும்.

அப்பாவுக்கு போன் செய்து, தனக்குச் சம்பளம் வந்திருப்பதைச் சொன்னான். “உங்களுக்கு என்ன வாங்கி வரட்டும்?” என்று கேட்டான். “எனக்கு எதுவும் வேண்டாம்பா. அம்மாகிட்ட பேசு” என்று போனை அம்மாவிடம் கொடுத்துவிட்டார். “பாருங்கம்மா, இந்த அப்பா திருந்தவே மாட்டாரா?” என்று அப்பாவை வழக்கம் போலத் திட்டினான்.

20–ம் தேதியைத் தாண்டும்போது, அவன் வாங்கிய சம்பளம் தீர்ந்து போயிருந்தது. முதல்முறையாகச் சம்பாதிக்கும் மகிழ்ச்சியில், இஷ்டத்துக்குச் செலவு செய்திருந்தான். ஆபீஸில் சம்பளம் போடுவதற்காக ஆரம்பித்த வங்கிக்கணக்கு இல்லாமல் இன்னொரு வங்கிக்கணக்கு கல்லூரி காலத்திலிருந்து இருக்கிறது. மாதா மாதம் செலவுக்கு அப்பா அதில்தான் பணம் போடுவார். வேலையில் சேர்ந்துவிட்டதால் அப்பா தனக்குத் தனியாகப் பணம் போட மாட்டார் என்று அவன் நினைத்திருந்தான். ஆனால், எல்லா மாதங்களையும் போலவே இப்போதும் முதல் தேதியே பணம் போட்டிருந்தார். அதுதான் மாதக்கடைசியை ஓட்டுவதற்கு அவனுக்கு உதவியது.

அதற்கடுத்த மாதங்களிலும் அப்பா பணம் போடுவதை நிறுத்தவில்லை. அந்த வருடமும் வழக்கம் போலவே தீபாவளி, பொங்கல் மற்றும் பிறந்தநாளுக்கு அவனுக்குப் புத்தாடை வாங்கிக் கொடுத்திருந்தார். ‘கையில் பணம் வந்தவுடன் நான்தான் மாறிவிட்டேன். அப்பா மாறவே இல்லை’ என்று வெட்கப்பட்டான் அவன்.

வேறு பெண் சிங்கங்களே இல்லை. அதனால்தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. பெதியா நார், தன் குட்டிகளை ஒரு தாயைப் போலவே பராமரிக்க ஆரம்பித்தது. குட்டிகளுக்கு இரை தேடித்தந்து, கொஞ்சம் வளர்ந்ததும் வேட்டையாடப் பழக்கிவிட்டது. இப்படியாக இரண்டு ஆண்டுகள் தாயுமானவனாக இருந்து குட்டிகளை வளர்த்திருக்கிறது. இப்போது அந்தக் குட்டிகள் தனியாக வேட்டையாடும் அளவுக்குத் தேறிவிட்டன.



பொதுவாக ஆண் சிங்கங்கள், துணையை இழந்ததும் வேறு பெண் சிங்கங்களைத் தேடிப் போய்விடும். ஆனால், பெதியா நார் சிங்கம், தன்னைத் தேடிவந்த பெண் சிங்கங்களையும் விரட்டிவிட்டது. ‘வளர்ப்புத் தாயிடம் குட்டிகள் சித்திரவதையை அனுபவிக்கலாம்’ என்ற எண்ணமே காரணமாக இருந்திருக்கும். உலக அளவில் இது ஓர் அரிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

# தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்!

முதுமையில் தனிமை கொடுமை. அதிலும் தந்தை மட்டும் தனியாக இருப்பது துயரம். தந்தை முன்னரே மறைந்து தாய் மட்டும் முதுமையில் நிலைத்தால், மகனிடமோ, மகளிடமோ புகுந்து காலத்தைக் கடத்திவிடுவார். அந்த வித்தை தந்தைக்குத் தெரியாது. கடைசி வரை அவருக்குத் தனிமைதான்.

தன் தேவைகள் எல்லாவற்றையுமே மனைவியிடம் மட்டுமே கேட்டுப்பெறுவது முதிய தந்தைகளின் இயல்பு. அல்லது, அவருக்கு என்ன தேவை என்பதை மனைவி அறிந்து சரியாகச் செய்துவிடுவார். வாழ்க்கைத்துணையை இழந்துவிட்ட தந்தைகளின் இறுதிக் காலம் பெரும்பாலும் மௌனத்திலும், தனிமையிலும் சில சமயம் ஒதுக்கி வைக்கப்பட்டும், புறக்கணிப்பிலும் கழிய நேரிடுகிறது. இதனால்தான் பலரும் தாங்கள் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றும், முற்றாக ஓய்வுபெற்று மூலைக்குச் செல்வதற்கு முன்னர் வாழ்க்கை முடிந்துவிட வேண்டும் என்றும் நினைக்கின்றனர்.

தன் மனைவியை இழந்த தந்தையின் தனிமை மிகமிகக் கொடுமையானது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். குடும்பத் தலைவர், அதிகாரம் செலுத்தியவர், சம்பாதித்தவர், பிறர் மதிப்புக்கு உரியவர் என்றெல்லாம் இத்தனைக் காலம் வாழ்ந்தவர் திடீரெனத் தடுமாறி நிற்பார். அதுவரை குடும்பத்தில் மற்றவர்களிடம் எதையும் கேட்டுப் பழகாத குடும்பத் தலைவராக இருந்தவர். கொடுக்க மட்டுமே தெரிந்து வைத்திருந்தவர். எனவே வயதான காலத்தில் வாய்திறந்து கேட்கமாட்டார். குடும்பத்தினரே அவரின் தேவைகளை அறிந்து செய்ய வேண்டும்.

மகன், மருமகள், பேரக் குழந்தைகள் எனக் குடும்பத்துடன் இருந்தாலும் தனிமையை உணரும் தந்தைகள் அதிகம். தனிமை உணர்வே முதுமையில் மரணத்தைச் சீக்கிரம் வரவழைக்கிறது. உடல்நலமும் மனநலனும் சீர்கெடும் அபாயமும் அதிகமாகிறது. கார்டிசால் போன்ற ஸ்ட்ரெஸ் ஹார்மோன்கள் அதிகம் சுரப்பதால், நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது. இதனால் சர்க்கரை நோய் மற்றும் இதயநோய் ஆபத்து அதிகரிக்கிறது.

**முதுமையில் தனிமையைத் தவிர்க்க தந்தை செய்ய வேண்டியவை:** அன்பானவர்கள் சொல்லும் எதையும் காதுகொடுத்துக் கேளுங்கள். குடும்பத்தினர் தங்களுக்குப் பிடித்த எதையும் செய்யும்போது ஊக்கப்படுத்திப் பாராட்டுங்கள். அவர்கள் உங்களுடன் நெருங்குவார்கள். புதிதாக எதையேனும் கற்றுக்கொள்ளுங்கள். இளம் வயதில் இருப்போருடன் அதிகம் பேசுங்கள். உங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். சமூக சேவை அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுங்கள். செல்லப்பிராணிகளை வளர்க்கவும் செய்யலாம்.

**தந்தையின் தனிமையைத் தவிர்க்க குடும்பத்தினர் செய்ய வேண்டியவை:** அவருக்கு உங்களிடம் சொல்லமுடியாத செலவுகள் இருக்கலாம், அவர் தேவைகளுக்காகக் கேட்காமலேயே கொஞ்சம் பணம் கொடுங்கள். வாசிக்கும் பழக்கம் அவருக்கு இருந்தால் செய்தித்தாள், பத்திரிகைகள் வாங்கிக் கொடுங்கள். அவர் செல்போனுக்கு ரீசார்ஜ் செய்வது, அவர் விரும்பும் சேனல்களைப் பார்க்க வசதிப்படும்படி தனி டி.வி வாங்கிக் கொடுக்கலாம்; அல்லது உங்களுடன் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க விடுங்கள். அவரை மூலையில் முடக்கி வைக்காமல், சின்னச்சின்ன வேலைகளைக் கொடுங்கள். குடும்பத்தில் தானும் ஓர் அங்கம் என்று அவர் உணர்வார். பேரன், பேத்திகளை அவரிடமிருந்து பிரிக்காதீர்கள். அவர்களின் அன்பே, அவரின் மனவேதனைகளுக்கு ஆறுதல் தரும் மருந்து.

தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்... அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்!





Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


வெற்றியின்
நம்பிக்கையை
உணர்த்திடுங்கள்
₹105
Onwards
Shreyas Iyer - Cricketer
Inners for Winners
RAMRAJ©
BANIANS
SCAN QR CODE
FOR STORE LOCATION
SUKRA®
Super Fine Banians
ROMEX®
Supreme Banians
RISE-UP®
Premium Banians
ARCHERY®
Gym Vest
COMPACT®
Flexible Rib Vest
ACOSTE®
BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-06-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

